# நிலா சிரித்தது

ஆர்வி

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18

அமுதம்-25
முதற் பதிப்பு—நவம்பர், 1951.
உரிமை பதிவு

விலை 8 அணா

நாஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை – 18

# நிலா சிரித்தது

கார்காலத்துச் சந்திரன் மங்கலாக ஒளி வீசிக்கொண்டிருந்தான். சாலையை ஒட்டிய மதகடிக் கடையில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டுதான் இருந்தது. செட்டியார் தம்முடைய வெள்ளெழுத்துக் கண்ணாடியை மூக்கு நுனியில் தள்ளிக்கொண்டு பேரேட்டுப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தார். கையில் சாட்டைக் குச்சியுடன் ஒரு கோணியை எடுத்துக் கொண்டு தம்புச்சாமி வெற்றிலைக் காவியேறிய பற்களை வெளிக் காட்டாமல் சிரித்துக்கொண்டு எதிரே வந்து நின்றான்.

வேதையஞ் செட்டியார் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு கண்ணாடிகளுக்கு மேலாக ஓரப்பார்வை பார்த்துவிட்டு, "யாரு, தம்புச் சாமியா?" என்றார்.

"ஆமாங்க! எங்கே கடையைக் கட்டிப்பிடப் போறீங்களோன்னு பயந்துகிட்டே வந்தேன். நல்ல வேளை!" என்றான் தம்புச்சாமி.

"ஆமாம்; ஏது? எங்கே பூட்டுவாறே இந்நேரத்துக்குமேலே?" என்று விசாரிக்கத் தொடங்கினார் செட்டியார்.

"டவுனுக்குப் போய் ஐயா வூட்டு மாப்பிள்ளை ஐயாவை டேசனிலேருந்து அழைச்சிக்கிட்டு வர்றேன். பருத்திக் கொட்டை மூட்டை வாங்கிப் போட மறந்துட்டேன். திரும்பி துறட்டையனார் கோயிலாண்டே வர்றக்குள்ளதான் நினைப்பு வந்திச்சு. கடையைக் கட்டிடப் போறீங்களேன்னு மாடுங்களை விரட்டியாந்தேன். நல்லவேளை; இல்லாட்டிப் போனா ஐயா கோச்சுப்பாங்க!" என்று கோணியைத் தூக்கித் தராசுப் படிக்கல்லுக்குப் பக்கத்தில் போட்டுவிட்டு நின்றான் தம்புச்சாமி.

"யாரு, மாப்பிள்ளை ஐயாவா? பட்டணத்திலேயிருந்தா?" என்று சன்னக் குரலில் விசாரித்தார் செட்டியார்.

"ஆமாம்" என்று தலையாட்டினான் தம்புச்சாமி. வேதையஞ் செட்டியார் ஒரு தடவை விழித்துப் பார்த்தார். இல்லாத சாமான்களை எதுவும் சட்டென்று 'இல்லை' என்னும் சுபாவம் அவருக்கில்லை. சாமான் இருக்கிறதா, இல்லையா என்று யோசிக்கிறாரா அல்லது இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்த ஒரு விஷயத்துக்கு என்ன விதமான பதில் சொல்லலாம் என்று யோசிக்கிறாரா

என்பதைக் கண்டுபிடிக்க முடியாதபடி அவர் விழிப்பது சகஜம். "அடப் பாவமே, ஏன் தம்புச்சாமி! போவக்குள்ளேயே சொல்லி விட்டுப் போகக்கூடாது? எடுத்து வைச்சிருப்பேனில்ல? சித்தே முந்திதான் இருந்த ஒரு மூட்டையையும் ஆறுமுகம் வந்து தூக்கிட்டுப் போனுன். மாப்பிள்ளை ஐயா நேரே பட்டணத்திலே இருந்துதானு? இல்லாட்டி......" என்று இழுத்தார்.

"அது சரி, பட்டணத்திலேருந்துதான். அப்போ மூட்டை இல்லேன்னு சொல்றீங்க?"

"பின்னே பொய்யா சொல்றேன்? ராத்திரி ஒரு பொழுது பாத்துக்கோ எப்படியாச்சும். பொழுது விடிஞ்சதும், இதோ பாரு, 'பாஸ்' வந்திருக்குது. வண்டியை எடுத்துக்கிட்டுப் போய் 'குட்ஷெட்'டிலிருந்து கொண்டார வேண்டியதுதான். எத்தனை மூட்டை வேணுமானுலும் தர்றேன். இதெல்லாம் முந்தியே சொல்லவாணும்? இந்நேரத்துக்கு மேலே வந்து, அது சரி—உனக்கும் போற அவசரம்! ஏன், தம்பியைக் கூப்பிடேன் இப்படி. ஏய், சுப்பிரமணியா! வெத்திலைத் தட்டை எடுத்து வையடா. தம்புச்சாமி, நீ போய் ஐயாவைக் கூட்டியா! ஏண்டா, 'அஜோகா' இருக்குல்லேடா? பின்னே சிக்கிறயே, எடுத்து வை!" என்று மாறி மாறிச் சொல்லிக் கொண்டு வந்தார்.

"இருக்கட்டும் செட்டியாரே, ஏதாவது ஒரு வீசையாவது இருக்கா பாருங்க. காலையிலேயே சுத்தமாத் துடைச்சு வைச்சுட்டேன். வெறுந் தவுட்டையா கிளறி வைப்பாங்க, சவாரி போன மாடுங்களுக்கு?" என்று உரத்த குரலில் பேசினுன் தம்புச்சாமி.

"அட நீ ஒண்ணு. இருந்தாக் கொடுக்கமாட்டேன்? இந்நேரம் கடையே கட்டியிருப்பேன். குறுவைச் சாகுபடி காலம்; கூட்டமா இருந்திச்சு. வச்சுக்கிட்டா இல்லேங்கறேன்? அதுவும் உனக்கு! எங்கே, தம்பியை கூப்பிடேப்பா."

"இப்போ அதுக்கெல்லாம் நேரமில்லே. ஐயா எதிர்பார்த்துக்கிட்டே இருப்பாங்க. மாப்பிள்ளை ஐயா இன்னும் ஒரு வாரம் போல இருக்கத்தான் போறாரு. நாளை மத்தானு பாருங்களேன்" என்று சொல்லியவாறே கோணியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"எங்கே அந்தத் தட்டை இப்படி எடு. ஒரு வெத்திலை மட்டும் எடுத்துக்குவம்" என்று கிளம்பியவன் திரும்பி வந்து கடைப் பையனைப் பார்த்துக் கேட்டான்.

"ஓசி வெத்திலையா!" என்ருர் செட்டியார்.

“பின்னே ஒரு வெத்திலைக்குக் காசா கொடுப்பாங்க?” என்றான் தம்புச்சாமி, ஐந்தாறு வெற்றிலைகளைக் கையில் எடுத்துக்கொண்டே.

தம்புச்சாமி போய்விட்டான். அடுத்த கணம் தடதடவென்று சரளைக் கல்லில் வில் வண்டிச் சக்கரங்கள் உருளும் சப்தம் செட்டியார் காதில் கேட்டது. அவர் வெள்ளெழுத்துக் கண்ணாடியைச் சரியாகப் போட்டுக்கொண்டு நிழலடர்ந்த மங்கிய சாலையில் செல்லும் வண்டியைக் கவனிக்க முயன்றார்.

மாப்பிள்ளை ஐயாவின் சுந்தரமான முகத்தை அவரால் சாதாரணக் கண்களால் பார்க்க முடியாததோடு கூடக் கற்பனைக் கண்ணாலும் பார்க்க முடியவில்லை.

“ஏண்டா சுப்பிரமணியா, இப்போ ஏதாவது விசேஷமாடா ஐயா வீட்டிலே?” என்று விசாரித்தார்.

“என்னமோ தெரியாதுங்களே. ஒரு சமயம் தீவிளி வருதுல்லே, அதுக்காவ வந்திருக்காங்களோ என்னவோ?” என்றான் பையன்.

செட்டியார் அதற்கு மேல் பேசவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்துவிட்டார். கடை கட்டுவதற்குக்கூடச் சுப்பிரமணியன் ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது.

* * *

**வே**தையஞ் செட்டியாருக்கு எப்போதுமே கொஞ்சம் விவகார ஞானம் அதிகம். விவகாரப் புத்தியும் அதிகம். மளிகைக் கடை வைத்தே மாடு கன்றுகள் வாங்கி, நிலம் நீச்சுக்கள் சேர்த்து, மாடி வீடும் கட்டி, கொடுக்கல் வாங்கலும் செய்து வந்தார். கிட்டத்தட்டத் தம்புச்சாமியின் ‘ஐயா’ சுவாமிநாத பிள்ளைக்கு அவர் ஐயாயிரத்துக்கு மேல் கடன் கொடுத்திருந்தார் அவர் கடன் கொடுத்த காரணமே மதகடிக்கு எதிர்த்தாற்போல் பச்சைப் பசேலென்று அடர்ந்து பரந்திருந்த பிள்ளையின் அரைவேலிநிலத்தை எப்படியாவது தட்டிவிடமாட்டோமா என்கிற சபலத்தினால்தான். இப்பொழுது அந்த கடன் இந்த மாப்பிள்ளை ஐயாவின் வருகையினால் ரொக்கப் பணமாகப் பைசலாகிவிடுமோ என்கிற யோசனையே அவரைப் பெரிதும் வாட்டியது. அவருடைய சந்தேகத்தை ஒட்டியே ஊரில் பேச்சும் அடிபட்டு வந்தது.

சுவாமிநாத பிள்ளை ஏதோ பணத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். கடனை எல்லாம் திருப்பி அடைத்துவிடப் போகிறார். என்ற செய்தி அவர் காதுக்கும் எட்டியிருந்தது. “கிட்டத்தட்ட

பெரிய ரூபாயிலே முப்பது ரூபாய் இருக்குமே. அவ்வளவு ரூபாய் திடீர்னு எப்படிப் புரட்டிக் கொடுக்க முடியும்?" என்று அவர் எண்ணிய துண்டு.

"அவருக்கு மருமகப்பிள்ளை ஒருத்தரு பட்டணத்திலே இருக்காராம். கொஞ்சம் பணவசதி உள்ளவராம். ரொக்கமா அவுங்க ஐயாவோட இன்ஷியூரன்ஸ் பணம் ஒரு பெருந் தொகையா வாங்கியிருக்காராம். அதை இப்படிக் கொடுத்துப் பிறகு வாங்கிக்கிறப்போல ஏதோ ஏற்பாடு நடந்திருக்கிறப்போல இருக்கு. அந்த மருமகப்பிள்ளைக்கே பெண்ணையும் கட்டிக் கொடுக்கறப்பலே யோசிச்சுக்கிட்டு இருக்காரு சுவாமிநாத பிள்ளை" என்ற பதிலும் அவர் காதில் விழுந்திருந்தது.

"அப்போ மதகடி நிலத்தை மறந்துட வேண்டியதுதானா?" என்று செட்டியார் கடைப் பூட்டை இழுத்துப் பார்த்துக் கொண்டே தமக்குள் எண்ணிக்கொண்டார். பணமாக வாங்காமல் அந்தப் பங்குகளை எப்படிப் பற்றிக்கொள்வது என்பதைப் பற்றியே அவர் சிந்தனை ஓடியது.

சுவாமிநாத பிள்ளைக்குப் பட்டணத்தில் அப்படி ஒரு தங்கை மகன் இருப்பதும் அவனுக்குப் பணம் கொடுக்கும் எண்ணம் ஏற்பட்டதும் அப்படி ஏற்படுவதற்குப் பெரும்பாலும் காரணமாகச் சுவாமிநாத பிள்ளைக்கு வயதுவந்த ஒரு பெண் இருப்பதும் அவருக்கு இப்போது மகா எரிச்சலையே உண்டுபண்ணின. 'உம்... பொண்ணு கொஞ்சம் சிவப்புத் தோலு. கடனோ கட்சியோ ஊட்டமா வளந்த பொண்ணு. பார்வைக்குக் கொஞ்சம் பசளையா, அதுவும் கொஞ்சம் படிச்சதா, கொஞ்சம் அப்படி இப்படி இந்தக் காலத்து நாவரிகத்துக்குத் தகுந்தாப்போல கொஞ்சம் தளுக்கா, மினுக்கா இருக்குதில்லே? அதிலே பிள்ளையாண்டான் கொஞ்சம் பல்லை இளிச்சுப்புட்டாப்போல இருக்கு! பணம் கொடுக்கச் சம்மதிச்சுட்டாப்போல இருக்கு!' என்று தமக்குத் தாமே பேசிக் கொண்டு வீட்டை அடைந்தார் செட்டியார்.

சலித்துப் போய்ச் சாய்மானத் திண்ணையில் சாய்ந்து கொண்டார். சாப்பாடுகூட வேண்டாம் என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். இவ்வளவு நாளும் மதகடி நிலத்தைப் பார்த்துப் பார்த்துத் தமதாகவே எண்ணிப் பூரித்துப் போயிருந்த அவருடைய கற்பனைக் கோட்டை இடிந்து நொறுங்கிக்கொண்டிருந்தது.

* * *

இரவு எப்படிக் கழிந்ததோ என்னவோ! நடராஜசுந்தரம் காலை ஏழு மணிக்குமேல்தான் கண்ணை விழித்தான். அதற்குள்

அவன் எழுந்துவிட்டானா என்று மூன்று தடவை சுவாமிநாத பிள்ளை வந்து வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்! "ரெயிலில் வந்த அசதி. தம்பி அசந்து தூங்கறான்" என்று தமக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு திரும்பினார். திரும்பியபோதெல்லாம் தம் பெண் இருக்கும் அறையை ஒட்டிய ஹால் வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டே போனார்.

"புஷ்பா! என்ன பண்றே? அந்தப் பொட்டியை எடுத்து வைச்சுக்கிட்டு ஒரு பாட்டு கிட்டு பாடறதுதானே? மறந்து போகாமே இருக்குமில்லே!" என்று சொல்லிவிட்டுப் போனார் ஒரு தடவை. இன்னொரு தடவை அவளுக்கு எதிர்த்தாற்போலவேவந்து, "ஏன், பட்டுப் புடவையைக் கட்டிக்கிட்டு தலையை நல்லா சீவிக் கிட்டுப் பளிச்சின்னு இருக்கக் கூடாதா?" என்று சொன்னார்.

"என்னப்பா, நீங்க ஒரு பக்கத்திலே? எப்போதும் போலத் தலையைச் சீவிக்கிட்டுதானே இருக்கேன்? இன்னும் என்ன பளிச் சின்னு இருக்கிறதாம்?" என்றாள் புஷ்பா.

"ஊஹும்.. அதுக்குச் சொல்லலே. இன்னும் நல்லா... இன்னும் நல்லா......" என்று மேலே என்ன சொல்வதென்று நிதானப்படாமல் வெளியே தம் நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டார் சுவாமிநாதபிள்ளை.

வாசலில் விசாரிக்க வந்தவர்களிடம் எல்லாம், "ரெயில்லெ வந்த அசதி யில்லே? பட்டணம்னா கிட்டவா இருக்கு? இரு நூறு மைலில்லே? லேசாவா இருக்கு! வந்த புள்ளை முகம் வாடில்லே போச்சு. நானும் எழுப்பக்கூடாதுன்னு வந்து உட் கார்ந்துட்டேன். மெதுவா எழுந்திருக்கட்டுமே, என்ன மோசம்! இதுவும் என்ன பட்டணமா? எழுந்திருச்சதும் எழுந்திருக்கா ததுமா வந்தவங்களை போறவங்களைக் கவனிக்கிறதுக்கு! இங்கே காரை எடுத்துக்கிட்டு ஓயாமெ அங்கே போய் இங்கே போய் அவுங்க அவுங்க ஆபீஸ் போறதுக்குள்ளே பாத்துப் பேசிக் கொள் ளணுமேன்னு ஓடணுமா?" என்று தாமாக வலுவில் சொல்லிக் கொண்டார்.

மேலே நடராஜசுந்தரம் தூக்கம் கலைந்த பின்பும் கண்ணைத் திறக்காமல் கவிழ்ந்து படுத்துக்கொண்டே குருட்டு யோசனை செய்துகொண்டிருந்தான். முதல் நாள் ஊரைவிட்டுப் புறப்பட்டது முதல் பூங்குடிக்கு வந்தது வரையில் ஒவ்வொன்றும் அவன் அகக் கண் எதிரே விரிந்து ஓடிக்கொண்டிருந்தன. மாமாவுக்குக் கடனைப் பணம் கொடுப்பதில் அவன் தாய்க்கு அத்தனை விருப்பம் இல்லை. இத்தனைக்கும் கூடப் பிறந்த அண்ணன். "என்னம்மா, நீயே இப்படிச் சொல்றே? அடுத்தாப்போல, பணம் கொடுக்க

மாட்டேன்னு நான் சொன்னாலும் சொல்லலாம். நீ கொடுக்க றுக்கிற கட்சியைச் சொல்லனும். மாமாகூடப் பிறந்தவள். உன் கல்யாணம் காட்சியை எல்லாம் செய்து வைத்தவர் அவர். பணத்தைக் கண்டதும் நீ இப்படிப் பேசலாமா? அவருக்கு என்ன சொத்தா இல்லை? நினைத்தால் இரண்டே வருஷங்களில் இந்தக் கடனை அவரால் திருப்பிக் கொடுக்க முடியாதா?" என்று அவள் தாய்க்குச் சமாதானம் சொன்னான். இருந்தாலும் தாயின் அந்த ரங்க எண்ணமும் அவனால் ஊகித்துக்கொள்ள முடிந்தது. பெண் ணைக் கொடுத்துவிட்டுப் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்துவிடப் போகிறாரே என்ற பயந்தான் அவளுக்கு. ஆனால் நடராஜசுந்தரத்தின் எண்ணமே வேறு. பணத்தைக் கொடுத் தாலாவது கல்யாணப் பேச்சைப் பேசவிடாமல் சலுகையுடனும் அதிகாரத் தோரணையுடனும் நிறுத்தி வைக்கலாம் என்பதுதான் அவன் போட்டிருந்த திட்டம். மாமாவுக்குப் பணம் கொடுத்தது போலவும் ஆகும்; பணம் திரும்பி வரும் வரையில் கல்யாணப் பேச்சை நிறுத்தி வைக்கவும் முடியும் என்று அவன் கருதினான்.

அவனுக்குப் பெண் கிடைப்பதற்கா பஞ்சம்? போட்டி போட்டுக்கொண்டு, 'நான், நீ' என்று பலர் தயாராக இருந்தார் கள். பி. ஏ. பாஸானதுமே பெரிய பெரிய இடங்களிலிருந்து எல்லாம் அவனுக்குப் பெண்ணைக் கொடுக்கப் பலர் முன் வந் தார்கள். தன்னுடைய சொத்துக்கும் வசதிக்கும் ஆசைப்பட்டே பலர் தன்மீது கண்ணி வைத்திருக்கிறார்கள் என்று அவனுக்கே தெரியும். அவனும் பணத்துக்கும் செல்வாக்குக்கும் ஆசைபட்டிருந் தால் இவ்வளவு நாட்களுக்குள் குபேரன் போன்றவர்களுடைய பெண்களில் ஒருத்தியை மணந்துகொண் டிருந்திருப்பான்.

ஊரைவிட்டுப் புறப்படும்போதே புஷ்பாவின் ஞாபகம் அவ னுக்கு வந்தது. முன்பு அவன் பார்த்தபோது அவள் சிறுமியாக இருந்தாள். பார்வைக்குப் பங்கரையாக இருக்கமாட்டாள் என்பது மட்டும் அவனுக்குத் தெரியும். ஆனால் நேற்றுப் பார்த்தபோது புஷ்பாவைக் கண்டு அவன் ஒரு கணம் மலைத்துப் போனான். அடி வாழை மரத்தைப்போல மினுமினுப்பும், செழிப்பும்—

பார்க்கப் போனால் புஷ்பாவை அவன்தான் மணந்து தீர வேண்டும் என்ற முறைக் கட்டாயம் இல்லை. சுவாமிநாத பிள்ளைக்கு மைத்துனன் மகன் ஷண்முகம் என்று ஒருவன் இருக்கிறான். அவன் நடராஜனைவிட இரண்டு வயசு மூத்தவன். அவனே முறைப்படி புஷ்பாவை மணந்துகொள்ளட்டுமே!

நடராஜசுந்தரத்தின் சிந்தனை கிர்கிர்ரென்று சுழன்றது. அவன் மனத்தில் இப்பொழுது புஷ்பாவுக்கோ அல்லது வேறு

எந்தப் பெண்ணுக்குமோ இடம் இல்லை. தன்னால் இங்குள்ள மாமாவுக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவனுக்கு உண்டாயிற்று. பூங்குடிக்கு இரவு வந்தது முதல் அவர்கள் காட்டும் பரிவையும் அன்பையும் கண்டு அவன் பயந்து போனான். தன்னுடைய உண்மை விருப்பத்தை அவர்கள் தெரிந்துகொள்ளும்போது ஏற்படக்கூடிய நிலையை அவனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அத்தனை திகிலாய் இருந்தது. 'பாவம், புஷ்பா! அவளும் ஏமாந்து போவாள். மாமாவைப் போல அவளுக்கு அந்த ஆசை இருந்தால் கட்டாயம் அவள் மனசு உடைந்தே போகும். ஆனால் அதற்கெல்லாம் நான் எப்படிப் பொறுப்பாளியாவேன்?' என்ற எண்ணம் மட்டும் சுற்றிச் சுற்றி வந்தது.

"தம்பி, எழுந்திட்டியா?"

சுவாமிநாத பிள்ளையின் குரலைக் கேட்டு நடராஜசுந்தரம் யோசனை கலைந்து எழுந்தான். அந்தக் குரலில் ஊதாரித்தனமான அன்பு கலந்திருந்ததுபோல் அவனுக்குச் சட்டென்று பட்டது. சுவாமிநாத பிள்ளை எதிலுமே கொஞ்சம் ஊதாரிதான். இல்லாவிட்டால் முப்பது வேலி மிராசுதாருக்கு முப்பதினாயிரம் ரூபாய் கடன் ஏன் ஏற்படவேண்டும்? தாராளமான கை; தலைக்குத் தலை அவர் பண்ணையில் நாட்டாண்மை; யாரையுமே நம்பிவிடுவார். அவன் அவன் கொடுத்ததுதான்; அவர் வாங்கியதுதான். அவர் படியை விட்டுக் கீழே இறங்கமாட்டார். பைசாவுக்குப் பிரயோஜனமில்லாத பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர் பதவிக்காக முன்பு பத்தாயிரம் ரூபாயைச் சுண்டிவிட்டார். அதிலிருந்து கடன் விருத்தியாகி வந்ததே தவிர அடைபடவில்லை. பஞ்சாயத்துத் தலைமைப் பதவியை, "சீ, இந்தச் சகதியிலேருந்து வெளியே போனால் போதும்" என்று ஒரு நாள் உதறி எறிந்துவிட்டு வந்துவிட்டார். பழங்கால வள்ளல்களைப் போலப் பேரெடுக்க வேண்டும் என்ற ஆசையில், வந்து கேட்பவர்களுக்கெல்லாம் தராதரம் இல்லாமல், கடைசிவரையில் பார்த்துவிடுவது என்ற உறுதியும் இல்லாமல் கையில் இருந்தவரையில் கொடுத்தார். கடன் கிடைத்தால் வாங்கியும் கொடுத்தார். அப்புறந்தான் அதுவும் அலுத்துப் போயிற்று. "எல்லாம் நானும் வேணது கொடுத்துப் பார்த்துவிட்டேன்!" என்பதோடு நிறுத்திக்கொண்டார். இப்பொழுது மானமாக, கடன் என்ற ஏச்சு இல்லாமல் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருக்க வேண்டும் என்று எண்ணி, நடராஜசுந்தரத்துக்குக் கடிதம் எழுதினார். "கடனுக்குத் தகுந்த நிலத்தை உன் பேருக்கு விற்றுவிடுகிறேன். கொஞ்சம் சிரமத்தைப் பாராமல் நீயே வந்து கடனை அடைத்துவிடு. அல்லு அச

லாரிடம் நான் போய்க் கேட்பதும் அவமானம்; நஷ்டம்; அவசியமும் இல்லை!'' என்று எழுதினர்.

"விற்பானேன், மாமா! நான் பணம் தருகிறேன். நீங்கள் மனசு வைத்தால் இதை இரண்டே வருஷங்களில் திருப்பித் தரலாம். அல்லது எப்பொழுது சௌகரியமாய் முடியுமோ அப்பொழுது கொடுக்கலாம். என்னிடந்தான் தந்தையின் இன்ஷியூரென்ஸ் பணம் வந்திருக்கிறதே!'' என்று எழுதினன் நடராஜசுந்தரம்.

இவ்வளவிலும் மாமாவின் ஊதாரித்தனமே அவன் மனக்கண் முன் நின்றது. ஆயினும் அந்த ஊதாரித்தனத்துக்கு ஆதாரமான அவருடைய வெள்ளை உள்ளமும் கல்மஷமற்ற அன்பும் அவருடைய குரலில் கலந்து தொனிக்கத் தவறவில்லை.

கீழே ஹார்மோனியச் சத்தம் கேட்கத் தொடங்கியது. அவன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். "அடேயப்பா, எத்தனை பயங்கரமான வாத்தியம்!'' என்று சொல்லிக்கொண்டே கீழே இறங்கி வந்து, ஹாலை ஒட்டிய அறையினுள் யார் வாசிக்கிருர்கள் என்று எட்டிப் பார்த்தான். அங்கே வாசித்துக்கொண்டிருந்தவள் புஷ்பா இல்லை. வேறு யாரோ ஒரு பெண்! பெண்ணு அவள்! அழகுள்ளவளையும் பெண் என்றுதான் சொல்லுகிறோம். அழகில்லாதவளையும் அப்படித்தான் அழைக்கிறோம். இப்படிப்பட்ட பேரழகு வாய்ந்தவளையும் பெண் என்றுதானு அழைப்பது? நடராஜசுந்தரம் கணநேரம் அவளையே பார்த்தான். அடுத்த கணம் புஷ்பாவைப் பார்த்தான். உடனே திரும்பிவிட்டான்.

"யார் இவள்? புஷ்பா அழகியா, இவள் அழகியா! இரண்டு பேரும் ஒவ்வொரு தினுசு அழகு!'' என்று அவன் உள்ளம் எடை போட்டது.

விசுக்கென்று எழுந்து நின்ற இருவரும் அவன் சென்றதும் திரும்ப உட்கார்ந்து கொண்டார்கள். ஆனல் பாட்டுச் சத்தம் மட்டும் நின்றது நின்றதுதான்!

* * *

## 'யார் இவள்?'

அதற்குப் பிறகு அன்று மாலை வரையிலும் நடராஜசுந்தரம் அவளைக் காணவே முடியவில்லை. அவன் இதுபற்றிக் கேட்டு விசாரித்து அறிந்து கொள்ளக்கூடிய ஆள் யாரும் கிடைக்கவில்லை. சுவாமிநாத பிள்ளையுடைய மகன் இருந்தாலாவது இது பற்றித் தைரியமாகக் கேட்கலாம். அவன் தன்னுடைய மாமா வீட்டுக்கு அந்தச் சமயம் போயிருந்தான்.

அவன் பெருத்த வாயாடி; புஷ்பாவைவிட சின்னவன். நடராஜன் வந்திருக்கிற செய்தி தெரிந்தால் அவன் மறுநாளே புறப்பட்டு வந்துவிடுவான். சுவாமிநாத பிள்ளை அன்றுதான் நடராஜன் வந்திருப்பதைப்பற்றிக் கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். மாமியுடன் நடராஜன் வெகுநேரம் ஊர்ச் செய்திகளையெல்லாம் பேசிக்கொண்டிருந்தபோதுகூட அந்தப் புதிய பெண்ணைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற நினைப்புத்தான். ஆனால் அவள் ஏதாவது வித்தியாசமாக நினைத்துக்கொண்டு விடுவாளோ என்று தன் விருப்பத்தை அடக்கிக்கொண்டான். புஷ்பாகூட அவனிடம் முந்திக்கொண்டு பேச முன் வரவில்லை. அவளது வாயைக் கிண்டி வார்த்தைக்குப் பதில் வரவழைக்க வேண்டியிருந்தது. முனுக்கென்று அவன் ஏதாவது கேலியாகச் சொல்லிவிட்டால் தொட்டாற் சுருங்கி இலைபோல அவள் முகத்தை மறைத்துக் கொண்டாள். அவளுடைய செய்கையும் தோரணையும் பேசுகின்ற பாங்கும் பார்க்கின்ற பார்வையும் விழியும், 'நான் முன்னிருந்த புஷ்பா அல்ல; அத்தானிடம் அட்டகாசமாய் விளையாடுவதற்கு! இப்பொழுது வயசாகிவிட்ட புஷ்பா; யௌவனத்தின் பூர்ணப் பொலிவையும் அடைந்து விட்ட புஷ்பா; ஆசையை வெட்கம் தடுக்கும்; வெட்கத்தை அன்பு கிளறும். அன்புக்கு வார்த்தைகள் என்ன அவசியமா?' என்று கேட்பதுபோல இருந்தன. அவன் கடைசியாகத் துணிந்து அந்த வார்த்தையைக் கேட்டேவிட்டான். "காலையிலே யாரோ மகா கோரமாய் உன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஹார்மோனியம் வாசித்தாளே அவள் யார்?" என்றான். புஷ்பா, "அவள் என்ன கோரமா; அவளைக் கோரம் என்றால் நான் எல்லாம் எப்படியோ?" என்று பதில் சொன்னாள். "நான் அவளைச் சொல்லவில்லை. அவளுடையப் பாட்டைச் சொன்னேன்" என்றான் நடராஜன். புஷ்பாவுக்கு ஏனோ ரோசமாய் இருந்தது. அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் வேறு ஏதோ அவசரம் போலத் தன் அறைக்குள் போய்விட்டாள். நடராஜனுக்கு அதற்குமேல் கேட்க வசதியில்லாமல் போயிற்று. அவளை மீண்டும் ஒரு முறையாவது நன்றாக ஊன்றிப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை அவனை எப்படியோ பற்றிக்கொண்டது. பல தடவை அவன் அந்த ஆசையைத் தன் மனத்திலிருந்து விரட்டிவிடப் பார்த்தான். மனிதனுடைய மனசு குரங்குப் பிடியைப் போன்றதல்லவா? நேரம் ஆக ஆகப் பிடி தளர்ந்துவிடுமோ என்று பற்றியுள்ள கிளையைக் குலுக்கிப் பார்க்கிற சுபாவம். சாப்பிடும்போதும் பேசும்போதும் அவளைப்பற்றி விசாரிக்க இடம் ஏதாவது கிடைக்காதா என்று எண்ணியது அவன் மனசு.

அன்று முழுவதும் அப்படி ஒரு வேலையும் இன்றி, சுவாரஸ்யம் ஏதும் இன்றி உப்புச் சப்பில்லாமல் கழிந்தது. மறுநாள் காலை

யில் மீண்டும் அதே ஹார்மோனியச் சத்தம் கேட்டு எழுந்தான். அவள்தானோ என்னவோ என்று அவசர அவசரமாக எழுந்து கீழே ஓடி வந்தான். ஹாலுக்குள் எட்டிப் பார்த்தான். "இது எப்படி இருக்கிறது? நேற்றுப் போலக் கோரந்தானா? இல்லை..." என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் புஷ்பா.

நடராஜனின் கண் அந்த அறையில் நாலாபுறமும் ஒரு நோட்டம் விட்டது. ஏமாற்றத்துடன் சலித்தது. "கோரமா? மகா கோரம்" என்ற வார்த்தைகள் அவன் நாவின் நுனிவரையில் வந்துவிட்டன. ஆனால் அதற்குள் தன்னைச் சமாளித்துக்கொண்டு விட்டான்.

"ஏன், யாரைப் பார்க்கிறீர்கள்?" என்றாள் புஷ்பா விஷமமான பார்வையுடன்.

"இல்லை; நேற்று வாசித்தாளே, அவளோ என்று பார்த்தேன்" என்றான் நடராஜன்.

"அப்படியானால் அவ்வளவு கோரந்தானா இதுவும், நேற்றைப் போல?" என்று மடக்கினாள் புஷ்பா.

"இல்லை, நான் அதற்குச் சொல்லவில்லை" என்று மென்று விழுங்கினான் நடராஜன்.

சிறிது நேரம் மௌனம்.

"அப்பொழுது அவளைப் பார்க்கத்தானா இவ்வளவு அவசரமாக எழுந்து வந்தீர்கள்?" என்று பரிகாசம் தொனிக்கக் கேட்டுவிட்டாள் புஷ்பா. கேட்ட பிறகுதான் தன் தவறு தெரிந்தது. பொறுமையோ ஆத்திரமோ பட அதற்குள் அவர்களுக்குள் அத்தகைய சௌஜன்யம் ஏற்பட்டு இருக்கவில்லை என்று தோன்றியது. இருந்தாலும் அத்தகைய கேள்வி கேட்பதற்கு அவளுக்கு உரிமை என்னவோ இருந்ததாக ஒரு பாவனை. நடராஜனுக்கும் அந்தக் கேள்வி அவள் எதிர்பார்த்தபடி விகல்பமாகப் படவில்லை. அவன் சகஜமான குரலில், "நான் என்னவோ சாதாரணமாகத்தான் எட்டிப் பார்த்தேன். ஒரு சமயம் நேற்று மாதிரி அவள்—அவள் யார் அந்தப் பெண்? எங்கே அதற்குப் பிறகு அவளை பார்க்கவில்லையே இங்கே?— அவளாயிருக்குமோ என்று ஒரு ஞாபகம் வந்தது, கேட்டேன். வேறொன்றுமில்லை" என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் தயங்கினான். நடுவில் கேட்ட கேள்விகளுக்கும் அப்போது அவனுக்கு விடை கிடைக்கும் என்று எதிர்பார்த்தான்; கிடைக்கவில்லை.

புஷ்பா அவளைப் பற்றி எவ்விதச் செய்தியும் சொல்லுகிற ஓர் எண்ணத்தில் இல்லை என்று தெரியவே மெல்ல வெளியேறினான்.

அவன் வாசற்படியைத் தாண்டியதும் "அத்தான்" என்று புஷ்பா அவனையறியாமலேயே கூப்பிட்டு விட்டாள்.

நடராஜனுக்கு அந்தச் சொற்கள் ஒரு புதுமையைத்தான் கொடுத்தன. முதல் தடவையாக அந்தப் புதுமையின் இனிமையை இன்றுதான் அவன் சரியாக உணர்ந்தான். திரும்பி ஏன் என்று கேட்கும் தோரணையில் புஷ்பாவைப் பார்த்தான். ஏதாவது பேச வேண்டும் என்ற படபடப்பில் அத்தானை 'அத்தான்' என்று அழைத்துவிட்ட துடிதுடிப்பில் அவள், "அவளை வேண்டுமானால் அழைத்து வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

நடராஜனுக்கு அந்தக் கேள்வி சுறுக்கென்று தைத்தது. "வேண் டாம், வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் பல்லை விளக்கிவிட்டுத் திரும்பி ஹாலில் வந்து உட் கார்ந்த போது புஷ்பாவே காபியைக் கொண்டு வந்து கொடுத் தாள். வாசனைப் பாக்கை எடுத்து வைத்தாள். தினசரிப் பேப்பரை எடுத்துக் கொடுத்தாள். கோபித்துக் கொண்டிருப்பானோ என்று சாந்தப்படுத்துகிற அடக்கம் மிகுந்த பண்பு அவளிடம் காணப்பட் டது. நடராஜன் எல்லாவற்றையும் மௌனமாக ஏற்றுக் கொண் டான். காபியைக் குடித்துவிட்டுக் கப்பை எடுத்து வைத்தான். "எடுத்துக் கொண்டு போகட்டுமா?" என்று கேட்டாள் புஷ்பா. அந்தக் கேள்விக்கு அவசியம் என்ன வந்தது? வெறும் கப்பை எடுத்துப் போகாமல் அதற்கு ஒரு கேள்வியா? அவன் பளிச் சென்று ஏதாவது பதில் சொல்லியிருப்பான். இருந்தாலும் தன் னுடைய பதற்றத்தை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாமல் தலையை ஆட்டி வைத்தான்.

புஷ்பா சிறிது நேரம் அவன் செய்கையையே கவனித்து விட்டு, "அவள் நமது பண்ணை மணியகாரரின் பேத்தி. பெயர் குந்தளம். அவளுடைய தகப்பனும் பட்டணத்தில்தான் ஏதோ உத்தியோகத்தில் இருக்கிறார். இன்னும் கல்யாணம் ஆக வில்லை. சும்மா இங்கே ஒரு மாதம் இருந்துவிட்டுப் போக வந்திருக் கிறாள். இங்கே வந்தால் என்னைப் பார்க்காமல் போகவே மாட் டாள்" என்று பாடம் ஒப்பிப்பது போல் அடுக்கிக்கொண்டே போனாள். சுவாரஸ்யமாகக் கேட்காதவன் போல அவ்வளவு விவரங்களையும் அட்சரம் விடாது காதில் வாங்கிக்கொண்டு, "சரிதான். அவளைப்பற்றியெல்லாம் தெரிந்துகொண்டு எனக்கு என்ன ஆகவேண்டும்?" என்று அலட்சியக் குரலில் பதில் சொன் னான். புஷ்பாவுக்கு ஒரு பெரிய சுமை குறைந்ததுபோல் இருந்தது. மறுபடியும் முதல் நாளைக் குணமெல்லாம் அவனை வந்தடைந்தன. அவள் உள்ளே போய்விட்டாள்.

சுவாமிநாத பிள்ளைக்கு அத்தானும் அம்மங்காளும் சங்கோசம் இல்லாமல் பழகுவதில் உள்ளூற ஆனந்தம். அவர்கள் ஹாலில் பேசிக்கொண்டிருந்தபொழுது அவர்களுடைய ஜோடிப் பொருத்தத்தைப்பற்றி ஒரு தடவை எண்ணமிட்டார். அன்று கொடுக்கல் வாங்கல் எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து முடிவு கட்டுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடன் கொடுத்தவர்களை எல்லாம் கணக்கு வழக்குப் பார்க்க வரும்படி சொல்லியனுப்பி யிருந்தார். ஷண்முகத்துக்குக்கூட அவர் கொஞ்சம் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. அவனைத் தவிர மற்றவர்களிடம் கணக்குத் தீர்த்து வட்டியில் ஒரு பகுதியைத் தள்ளி, ரொக்கப் பணத்தைக் கொடுத்துத் தீர்த்துக்கொள்வது என்று சுவாமிநாத பிள்ளையும் நடராஜனும் முடிவு கட்டி வைத்திருந்தார்கள். பாங்கி உண்டியலாகக் கொண்டு வந்திருந்த பணத்தைப் பக்கத்து டவுனில் உள்ள பாங்குக்குப் போய்ப் பணமாக மாற்றி வரவேண்டியிருந்தது.

சுவாமிநாத பிள்ளை நம்புச்சாமியைக் கூப்பிட்டு வண்டியைக் கட்டச் சொன்னபோது, குந்தளா அந்த வீட்டை நோக்கி வருவதை நடராஜன் கவனித்துவிட்டான். ஆயினும் அவர் கவனிப்பதற்கு முன்னதாகவே, "மாமா, நான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிடுகிறேன். உடம்பு அவ்வளவாகச் சரியாயில்லை. அதனால் நீங்களே போய் மாற்றிக் கொண்டு வந்துவிடுங்கள். அதற்கு நான் எதற்கு?" என்றான். குந்தளா வாசற்படியை நெருங்கிவிட்டாள். நடராஜனின் மனசு என்னவோ படபடத்தது. பின்னால் ஒரு தடவை திரும்பிப் பார்த்துக்கொண்டான். குந்தளாவை ஒரு மூறை நன்றாகக் கவனித்துப் பார்த்தான். கண்ணைப் பறிக்கும் அழகு என்றால் அவளைத்தான் சொல்லவேண்டும் என்று மறுபடியும் தோன்றிற்று.

அவன் மனம் ஏனோ தவியாகத் தவித்தது. வந்தவள் கொஞ்ச நேரமாவது இருக்க வேண்டுமே அதற்குள் புஷ்பாவும் அவளைத் திருப்பி அனுப்பாமல் இருக்க வேண்டுமே என்று அவனுடைய விசாரம் சென்றது. சுவாமிநாதபிள்ளை பாங்குக்குச் சென்று பணம் மாற்றிவரக் கிளம்பிவிட்டார். நடராஜன் தினசரிப் பேப்பரைப் பிரித்து வைத்துக்கொண்டான். ஒரு எழுத்தாவது அவன் கண்ணில் பதியவேண்டுமே!

புஷ்பாவும் குந்தளாவும் உள்ளே கலகலவென்று எதற்காகவோ சிரித்த சப்தம் கேட்டது. நடராஜன் தீவிரமாகப் பத்திரிகை படிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்தான்.

நடராஜனல் வெகு நேரம் அப்படியே பாசாங்கு செய்து கொண்டிருக்க முடியவில்லை. பெண்களைப் பற்றியோ, கல்யாணத்தைப்பற்றியோ இதுவரை அவன் எண்ணியதேயில்லை. அப்படியிருந்தும் இப்போது திடீரென்று தன் மனசு இவ்வளவு தூரம் கலங்குவதற்கு என்ன காரணம் என்பதை அவனல் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. குந்தளாவின் கவர்ச்சி மிகுந்த தோற்றமோ அல்லது புஷ்பா எளிதில் தன்னுடன் பிணைக்கப்படுவாள் என்ற பயத்தினல் எழுந்த ஓர் உணர்ச்சியோ அவன் மனசை ஒரு நிலையில் இருக்கவிடாது செய்து வந்தது. அவனை அறியாமல் அவனது பார்வை அந்த அறையின் பக்கமே சென்று திரும்பியது. குந்தளா அவன் கண்ணில் படவேயில்லை.

அதற்குள் வெளியிலிருந்து "ஐயா, ஐயா" என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. நடராஜன் எழுந்து சென்று பார்த்தான். வந்திருப்பவர் அவருக்கு அறிமுகமில்லாதவராய் இருந்த போதிலும் அவர் என்னவோ நடராஜனைக் கண்டதும் மிகவும் பழகினவர் மாதிரி சிரித்துக்கொண்டே ஒரு கும்பிடு போட்டார். பிறகு, "தம்பி எப்போ வந்தது? ஊரிலே அம்மாளெல்லாம் சௌக்கியந்தானே?" என்று கேட்டார்.

கிராமத்திலே உள்ள மனிதர்களே இப்படித்தான். அவர்களுக்கு அறிமுகமானவர்களாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. யார் என்று தெரிந்திருந்தாலும் தெரிந்திராவிட்டாலும் பார்த்தமாத்திரத்திலே வீண் கௌரவம் எதுவும் பாராட்டாமல் கலகலப்பாக உள்ளன்புடன் பேசிப் பழகத் தொடங்கிவிடுவார்கள். நகரங்களில் உள்ள வாழ்க்கையின் யந்திரப் போக்குக்கும் கிராமங்களில் உள்ள வாழ்க்கையின் இருதயமுள்ள மனிதத்தன்மைக்கும் உள்ள வேறுபாட்டை நடராஜன் அவர் முகம் பிரதிபலிப்பதிலிருந்து தெரிந்துகொண்டான். உடனே அவனும் பதிலுக்குக் கும்பிட்டுக்கொண்டே, "முந்தா நாள்தான் வந்தேன். எல்லாரும் சௌக்கியந்தான்" என்றன்.

வந்தவர், "நம்பளை உங்களுக்குத் தெரிந்திருக்காது. என்னைத்தான் வேதையஞ்செட்டி என்று சொல்லுவாங்க. பெரிய ஐயா வரச் சொல்லிச் சீட்டு அனுப்பியிருந்தாங்க. இதோ அந்த மதகடியிலே இருக்கு பாருங்க, அதுதான் நம்ப கடை. பெரிய ஐயா இல்லீங்களோ? அன்னிக்கு ராத்திரிகூட நம்ம கடையாண்டேதான் நீங்க வந்த வண்டிகூட நின்னுச்சு. உங்களைக் கடையாண்டே இறங்கச் சொல்லணும்னு தம்புச்சாமிகிட்டே கூட........" என்று அவர் விடாமல் பேசிக்கொண்டே போனர்.

நடராஜனுக்குக் கொஞ்சம் தர்மசங்கடமாய் இருந்தது. அவரிடத்தில் ஒன்றும் பேசவே வேதனையாக இருந்தது. அவனுடைய

தனிமையை வேண்டுமென்றே கெடுக்க வந்த ஓர் இடையூருகவே அவனுக்குத் தோன்றிற்று. உட்காரச் சொல்லக்கூட அவனுக்குச் சட்டென்று தோன்றவில்லை. ஏதோ ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு, "ஆமாம், உட்காருங்களேன்" என்று அரை மனசுடன் உபசரித்தான். நகரத்து மனிதராளுல் அவனுடைய பேச்சின் தோரணையைக் கண்டு, "நான் போய்விட்டுப் பிறகு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பி இருப்பார். ஆனுல் வேதையஞ் செட்டியாருக்கு நகரத்தின் இங்கிதம் அவ்வளவாகத் தெரியாது. அவர் "அதுக்கென்னங்க?" என்று சொல்லிக்கொண்டே முன்னுலாகக் கிடந்த குருச்சி ஒன்றில் உட்கார்ந்துகொண்டார். "டவுனுக்குப் போயிருப்பாங்களோ?" என்று 'ட'வை உடைந்து போவதுபோல உச்சரித்தார். பதிலை எதிர்பார்க்காமலே நடராஜன் தலையை ஆட்டியதைக் கண்டு, "இப்போ வந்துடுவாங்க; இல்லே?" என்ருர். நடராஜன் அவர் கேட்டதைப் புரிந்து கொள்வதற்கு முன், "அம்மா இருக்காங்கள்ள உள்ளே?" என்ருர் ரொம்பநாள் பழகினவர் போல, "வெத்திலேத் தட்டு இருந்தா எடுத்துவரச் சொல்லுங்க" என்று கேட்டுக்கொண்டார்.

நடராஜன் இந்த சௌஜன்யத்தை எல்லாம் சகித்துக் கொள்ளும் மனப் பக்குவம் உள்ளவன்தான். ஆயினும் 'சுத்தப் பட்டிக்காடு என்ருல் இதுதான்' என்று அந்த மனிதருடைய தோற்றத்தையும் தோரணையையும் பார்த்து எண்ணிக்கொண்டான். இந்தச் சமயத்திலே நடு ஹாலில் யாரோ வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போவதுபோல் தெரிந்தது. ஒரு சமயம் குந்தளாதானே என்று அவன் வேகமாகத் திரும்பி வந்து பார்த்தான். அதற்குள் வந்தவள் உள்ளே போய்விட்டதால் யார் என்று தெரியவில்லை. தன்னுடைய ஏமாற்றத்தை மறைக்க வெற்றிலேத் தட்டை எடுத்துப் போக எண்ணினுன். அது உள் தாழ்வாரத்தில் உள்ள மேஜை யின் மேல் இருக்கும் என்பதைப் போகும்போது வரும்போது பார்த்திருக்கிருன். இப்பொழுது திடீரென்று அதையே ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு, "புஷ்பா" என்று கூப்பிட்டுக் கொண்டே அவளுடைய அறைக்குள் எட்டிப் பார்த்தான். 'இன்னும் ஒரு வாரம் ஆகும்' என்ற வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அது புஷ்பாவின் குரலாகத்தான் இருக்கவேண்டும் என்று பட்டது. தன்னைப் பற்றிய விசாரணைதான் நடக்கிறது போல் இருக்கிறது என்று அவனுக்குக் குதுகுதுப்பாய் இருந்தது. ஒரே நாளில் தன் வயதிற்குரிய பெருந்தன்மையை எல்லாம் மறந்து அற்ப விஷயங்களில் ஏற்படும் ஒரு திருப்தியை விரும்புகிற சிறியவனுகிவிட்டவன் போன்ற சிறுமை அவனைக் கவ்விக் கொண்டது. குந்தளா இப்போது அவனை எட்டிப் பார்த்தாள்.

அவனும் பார்த்தான். முதல் நாள் பார்த்ததைவிடக் கவர்ச்சி பொருந்தியிருந்தது அவள் தோற்றம். அந்தக் கண்களே அவனுக்கு ஒருவிதக் குளிர்ச்சியைத் தந்தன. பெண்களின் சௌந்தரியம் நிலவின் தண்மையைப் போல மனசை மயக்கக் கூடியது என்ற உண்மையை இன்றுதான் அவன் உணர்ந்தான். மகா காவியங்களுக்கு நாயகியாக இருக்கத் தகுந்த தகுதி அவளிடம் அந்த வெறும் பார்வையிலேயே இருப்பதாக அவன் எண்ணினான். வார்த்தைகள் குளற, "வெற்றிலைத் தட்டு இங்கே இருக்கிறதா? யாரோ வந்திருக்கிறார்கள்" என்றான். பிறகுதான் புஷ்பா அந்த அறையில் இல்லாததை அவன் தெரிந்து கொண்டான். "ஓ, புஷ்பா இல்லையா!" என்று சொல்லிக்கொண்டே ஓர் அடி பின் வாங்கினான். குந்தளா விடுவிடுவென்று வெளியில் வந்தாள். அவனைத் தாண்டிக்கொண்டே உட்புறம் சென்றுவிட்டாள்.

புஷ்பாவைத் தேடிக்கொண்டு அவள் பின்கட்டுக்குப் போவதைக் கவனித்த நடராஜன், தானே உள் சென்று அந்தத் தட்டைக் கொண்டு வந்து வேதையஞ் செட்டியார் முன்பாக வைத்தான்.

"நீங்களும் உக்காருங்க" என்று அவனை உபசரித்தார் செட்டியார்.

தீராப் பொறியாக உட்கார்ந்தான் நடராஜன்.

"தம்பி பணத்தோட வரப்போவுதுன்னு கேள்விப்பட்டேன். அப்படித்தானா?" என்று பச்சையாகவே கேட்டார் செட்டியார்.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லச் சங்கோஜமாய் இருந்தது நடராஜனுக்கு. செட்டியார் அவன் பதில் சொல்லும் வரையில் காத்திருக்கவும் இல்லை.

"அப்படித்தான் இருக்கவேணும். மாமன்காரருக்கு ஒரு சமயத்துக்கு ஒத்தாசை செய்யத்தான் வேணும். அந்த மாதிரி இருந்தாத்தான் பார்க்கிறவங்களுக்கும்... ஏன், நான் சொல்றதிலே தப்பு ஏதாவது...?" என்றார் செட்டியார்.

நடராஜன் வெறுமே தலையை ஆட்டினான்.

"நாளைக்குப் பொண்ணைக் கட்டிக்கப் போறீங்க. பின்னே இல்லாட்டி சொந்தம் விட்டுப் போகலாங்களா? முறை ஒண்ணு இருக்குல்லே?...ஏன், நான் சொல்றதிலே தப்பு ஏதாவது...?" என்றார் செட்டியார் மறுபடியும்.

நடராஜன் மெதுவாகப் பேச்சைத் திருப்ப எண்ணி, "உங்களுக்குச் சேரவேண்டிய தொகை எவ்வளவு?" என்று கேட்டான்.

"நமக்கு உபாயந்தாங்க. வட்டி கிட்டி எல்லாம் சேத்தா, ஒரு அஞ்சாறு ரூபாக்குள்ளேதான் இருக்கும். நமக்கு மதகடி நிலத்தைத் தான் பந்தகமா வச்சிருக்கிறாங்க. கடனை, பணமாக் கொடுத்துத் தீர்த்தாலும் சரி, இல்லே நிலத்துக்கு மொத்தமா ஒரு தொகை இவ்வளவுன்னு போட்டுப் பாக்கி இவ்வளவு கொடுத்துடுடான்னு கிரய சாஸனமாச் செய்து கொடுத்துட்டாலும் சரிதான். எப்படியோ ஒருத்தரை ஒருத்தர் மோசம் செய்துடப் போறதில்லே. ஏன், நான் சொல்றதிலே தப்பு ஏதாவது?...அடுத்தாப்பலே நீங்க இருக்கிறீங்க. நாளைக்கு மருமகப்பிள்ளையா, பொண்ணைக் கட்டப் போறீங்க. நீங்களே பாத்து ஒண்ணைச் சொன்னாலும் பெரிய ஐயா அட்டி சொல்லப்போறதில்லே. ஏன்?...ஆக நீங்க இது விஷயமா ஒழுங்கு பண்ணத்தான் பணத்தோட வந்திருக்கீங்கங்கிற வரைக்கும் நமக்கு எல்லாம் சந்தோசம்......" என்று செட்டியார் கேள்வியும் பதிலுமாய் இடங்கொடுக்காமல் பேசிக்கொண்டே போனார்.

'பொண்ணைக் கட்டப்போறீங்க' என்ற பகுதியைச் செட்டியார் சொல்லும்போது குந்தளா வாசல்வரைக்கும் வந்துவிட்டு எதையோ நினைத்துக்கொண்டவளாய், திரும்பி உள்ளே சென்றாள். அப்போதும் அவர்கள் கண்கள் ஒன்றையொன்று சந்தித்தன. அவளுடைய கண்களிலே ஏளனம் தென்படாவிட்டாலும் நடராஜனுக்கு என்னவோ மகா லஜ்ஜையாக இருந்தது. மெதுவாக அந்த இடத்தைவிட்டு எழுந்துபோக அவன் விரும்பினான். செட்டியார் விட்டால்தானே!

சின்னக் குரலில், "நம்ப அம்மாளுக்கு நம்ப ஐயா வீட்டுக் குழந்தையை நீங்க கட்டிக்கிறதிலே அவ்வளவா விருப்பம் இல்லேன்னு—ஏன், நான் சொல்றதிலே தப்பு ஏதாவது...?" என்று இழுத்துக்கொண்டே போனார் செட்டியார்.

எல்லாவற்றிற்கும் அவர் 'நம்ப' போட்டுப் பேசியது ஒருபுறத்தில் வேடிக்கையாகவும் மற்றொருபுறத்தில் எரிச்சலாகவும் இருந்தது நடராஜனுக்கு. அவனுக்குப் பதில் சொல்லவே முடியவில்லை; பிடிக்கவும் இல்லை. மறுபடியும் பேச்சின் போக்கை மாற்ற எண்ணி, "உங்களுக்கு எவ்வளவு சொத்து அடைமானம்?" என்று கேட்டான். அவன் குரல் கொஞ்சம் மிடுக்காகவே இருந்தது.

"சொல்பந்தான்; ஒரு வேலி நிலம். அதாவது ஆறு ஏக்கர் சொச்சம். இருக்கிறதிலே அது கொஞ்சம் சுமாரான நிலம். அதனாலேதான் அது நம்பகிட்டயே இருந்துவிட்டுப் போகட்டுமே... அடுத்தாப்பலே ஐயாகிட்டே இருக்கிறதும் ஒண்ணுதான்; நம்ப கிட்ட இருக்கிறதும் ஒண்ணுதான். இப்போ வந்துட்டுப் போச்சுல்ல

ஒரு பொண்ணு, அது நம்ப அண்ணாத்தை பேத்திதான். நம்ப அண்ணாத்தை யாரு? நம்ப பண்ணையிலே மணியம் பாக்கிறாங்களே, அவங்கதான். ஆக அவுங்க வேறேயில்லே; நான் வேறேயில்லே. ஏது, நான் சொல்றது புரியுதுங்களா?" என்று கேட்டார் செட்டியார். இப்போது நடராஜனுக்குப் பேச்சு கொஞ்சம் சுவை தட்டியதுபோல் இருந்தது. அதே சமயத்தில் கொஞ்சம் சுவை குன்றியது போலவும் இருந்தது. 'சரிதான்; அவள் செட்டியார் வீட்டுப் பெண்' என்ற விஷயந்தான் அவனுக்குச் சுவை குன்றச் செய்தது. அவன் தன் ஆவலை அடக்கமாட்டாமல் கொஞ்சம் நிதானித்து, "நம்ப மணியகாரர் தம்பியா நீங்க? இந்தப் பொண்ணு பட்டணத்துப் பொண்ணுன்னு காதிலே விழுந்ததே. அப்போ அது...நீங்க......" என்று மேலே என்ன பேசுவது என்று தோன்றாமல் இழுத்தான்.

"ஆமாம், அது பட்டணத்திலே இருக்கிற பொண்ணுதான். திருவல்லிக்கேணியிலே தேரடித் தெரு இருக்குங்கள்ளே; அங்கே தான் இருக்காரு நம்ப மருமகப்பிள்ளை. அதாவது இந்தப் பொண்ணோட தகப்பனாரு. அங்கேதான் நம்ப அண்ணன் மகளைக் கட்டிக் கொடுத்திருக்குது. அவருக்குச் சர்க்கார் உத்தியோகம். இப்பத்தான் சமீபத்திலே ஆபீசரா ஆனாரு. சுப்பிரமணிய பிள்ளைன்னு பேரு. சம்பளம் மூன்னூறு ரூபாய்போல வாங்கறாரு......" என்றார் செட்டியார்.

"அதென்ன, நீங்க செட்டியாருங்கிறீங்க, அவரைப் போய் பிள்ளைங்கிறீங்களே!" என்று இடைமறித்துக் கேட்டான் நடராஜ சுந்தரம்.

அவனுக்குப் போன சுவாரஸ்யம் எல்லாம், சுவை எல்லாம் திரும்ப வந்துவிட்டதைப்போல இருந்தது. செட்டியார் உடனே பதில் சொல்லாமல் சிரித்தார். "நம்மள்ள இது..."

"வழக்கமா? அப்படி ஒரு வழக்கம் இருக்கிறதா, என்ன? நம்பளைன்னு யாரைச் சொல்றீங்க? எங்களைச் சொல்றீங்களா, உங்களைச் சொல்றீங்களா?" என்றான் நடராஜன்.

"இல்லே இல்லே. வளக்கம்னு ஒண்ணும் கிடையாது. அதிலே வந்துங்க, என்னை மட்டுந்தான் செட்டியாரும்பாங்க. அடுத்தாப்பலே நம்ப அண்ணாத்தையைக் குமாரசாமி பிள்ளைன்னுதான் எல்லாரும் கூப்பிடுவாங்க. அதாவது நாம்ப, நானெல்லாம்கூட ஒரே சாதிக் காரங்கதான். நான் சின்னப் பிள்ளையா இருக்கக்குள்ளே கொஞ்சம் செவலே. எனக்கு அடுத்தாப்பலே ஒரு பொண்ணு பிறந்திச்சு எங்க ஐயாவுக்கு. அதுகூட இப்போ இல்லீங்க, அதனாலே கொஞ்சம் குறை வயிறு விளுந்து, தொந்தியும் தொப்பையுமா நான் இருந்தேன்னு

என்னைமட்டும் எல்லாரும் விளையாட்டாக் கூப்பிட்டு அதே பேரு இப்போ நிலைச்சுப் போயி, வேதையஞ் செட்டின்னே பேரா யிட்டுது. இப்போ பத்திரத்திலே கையெழுத்துப் போடக்கொள்ள வேதையா பிள்ளைன்னுதான் நான் போடற வாடிக்கை. எது, நான் சொல்றது புரியுதுங்களா...?" என்ருர் செட்டியார்.

"புரியுது புரியுது - நல்லாப் புரியுது! ஆனல் நம்ப சாதின்னீங்களே, அதாவது நாங்க நீங்க எல்லாரையுந்தானே சொல்றீங்க?" என்ருன் நடராஜன், வர்ணுசிரம தர்மத்தில் திடீரென்று எங்கிருந்தோ ஓர் அக்கறை வந்துவிட்டவன் போல.

"ஆமாங்க, ஆமாங்க. நம்பளை எல்லாம் சேத்துத்தான் சொல்றேன். இன்னும் பாக்கப்போனு ஒரு சொந்தமாக்கூட வந்துடுவோம். அதுக்கென்ன இப்போ எங்களுக்குச் சொத்தெல்லாம் போயிட்டுது. இப்போ நம்ப பெரிய ஐயா கூட்டாளிக்கு அவுங்க பாட்டன் பூட்டன் சொத்து நிலையாத் தங்கிப் பெருகிப் போயிடுச்சு-கொள்வினை கொடுப்பினை நின்னுட்டுது. அதுலே நான்மட்டுந்தான் கொஞ்சம் இந்தக் கடைகண்ணி வச்ச பிறகு ஏதோ கொஞ்சம் சுமார் பணம் காசைப் பார்த்தவன்னு ஒரு பேரு-பேருதான்; நானும் ஒண்ணும் அதிகமாக் கண்டுப்பிடலை. இப்போ அடுத்தாப் பலே பெரிய ஐயா நினைச்சாங்கன்னு நம்ப கடனை ஒரே வருஷத்திலே அடைச்சுத் தீர்த்துப்பிடலாம். எல்லாம் நம்ப வாயாலே சொல்றேமே யொழிய, இப்போ கொடுக்கலாம்னு கொடுத்துத் தீர்த்துப்பிடமாட்டாரா? முடியாமத்தானே இப்போ நீங்க பணம் கொண்டு வந்திருக்கீங்க! ஆனல் ஒண்ணுமட்டும் எல்லாருக்கும் தெரிஞ்ச சங்கதிதான். பெரியஐயா கை ஓட்டைக் கை. உங்கமாமா வைத்தான் சொல்றேன். கொஞ்சம் கை தாராளம். விடக் கட்டத் தெரியாது. மானேசுமெண்டெல்லாம் அவனவன் நாட்டாமை தான். ஒண்ணைக் காதிலே வாங்கமாட்டாரு" என்று எங்கேயோ ஆரம்பித்து, எங்கேயோ பேசிக்கொண்டே போனுர் செட்டியார்.

அந்த விவரங்கள் எல்லாம் நடராஜனுக்கு அவசியமாகவும் ருசியுள்ளதாகவும் படவில்லை. "அது சரி, உங்க பேத்திக்கு இன்னும் கல்யாணம் செய்யவில்லையா?" என்று மட்டும் கேட்டான்.

"செய்யணும்; செய்வாங்க; செய்யாமலா இருப்பாங்க! ஆனு அந்த விவரமெல்லாம் நம்பளுக்கு அவ்வளவா——என்னு, நானும் நம்ப அண்ணுத்தையும் சக்ஜமா, பேச்சு வார்த்தை வச்சுக்கிறுப்பலே இல்லே. அவரு குணம் ஒரு மாதிரி; நம்ப குணம் ஒரு மாதிரி. நமக்கு எல்லாரும் வேணும்; அவரு அப்படி இருக்கமாட்

டாரு. அதனாலே எங்க ரெண்டு பேருக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. வரத்துப் போக்கும் கிடையாது. ஆனா நான் இந்தக் குளந்தைங்களைக் கண்டா மட்டும், 'என்ன சேதி, எப்ப வந்தே?' இன்னு கேக்கறதுதான். அதுகளும் சொல்றதிதான். அடுத்தாப் பலே மாப்பிள்ளையே வந்தாலும் கொண்டாலும் எங்க விரோதத் தையெல்லாம் பாக்கமாட்டாரு. நம்ப வீட்டுக்கு வருவாரு. சாப்பிடுவாரு, கொள்வாரு; போவாரு. ரெண்டுகாசு எங்கிட்டே வரதுல்லே. அதிலே எங்க அண்ணாத்தைக்கு ஒரு ஆத்திரம்; அசிகை. வேறே ஒண்ணும் இல்லே சங்கதி!" என்றார் செட்டியார்.

"அது சரி; பட்டணத்துலே தேரடித் தெருவிலே உங்கள் மாப் பிள்ளை வீட்டு நம்பர் என்னவென்று சொன்னீர்கள்?" என்று கேட்டான் நடராஜன்.

"நம்பரா? அது வந்து நாப்பத்தெட்டோ, முப்பத்தெட்டோ மறந்து தொலைஞ்சுட்டுதே! அது என்னாத்துக்குங்க? தேரடித் தெரு விலே போய், 'சுப்பிரமணிய பிள்ளை விடு எது?' இன்னு கேட்டா, பச்சைப் புள்ளே கூடச் சொல்லிடுமே. அவுருதான் பெரிய ஆபிசரு ஆச்சே! ரொம்பத் தங்கமானவரு. ஒரு வாட்டிப் பேசிப் பளகினாப் போதும்; விடமாட்டாரு. அருமையான குணம்" என்றார் செட்டியார்.

நடராஜனுக்கு அதற்குமேல் அவரிடம் என்ன பேசுவது என்று யோசனையாக இருந்தது. இதுவரை குந்தளாவைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியாமல் தவித்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாகிவிட்டது. இனி அந்த மனிதருடன் பேசிப் பொழுது போக்குவது என்பது அவனுடைய இயல்புக்குச் சோதனை தரும் ஒரு விஷயமாகும்; காலத்தையும் வீணாக விரய மாக்குவதாகும். அதைவிடக் குந்தளாவைப்பற்றியும்அவள்தந்தை சுப்பிரமணிய பிள்ளையைப்பற்றியும் யோசித்துக்கொண் டிருப் பதே பன்மடங்கு மனசுக்குப் பிடித்தமாக இருக்கும் போலிருந்தது. என்றுமில்லாத ஒரு புதுவிதக் கிளர்ச்சி அவன் மனசில் உதித்திருந்தது.

குந்தளா படித்தவளா, படிக்கிறவளா? காலேஜிலா, ஹைஸ்கூலிலா? அவள் மணவாழ்க்கை பற்றிக் கொண்டிருக்கும் கருத்து என்ன, குணம் எப்படிப்பட்டது, பார்வைக்கு லட்சண மாக இருப்பதைப்போல அவளுடைய சுபாவம், மனப்பாங்கு முதலியவை இருக்குமா?—என்றெல்லாம் எண்ணிப் பார்க்க விரும் பியது அவன் மனம். இந்தக் கேள்விகளுக்கு வேதையஞ் செட்டியா ரிடமிருந்து எந்தவிதப் பதிலும் அவனால் பெறமுடியாது. சுப்பிர மணிய பிள்ளையைப் பற்றியாவது தெரிந்துகொள்ள முடியுமா?

அவருடைய செல்வ நிலை, அந்தஸ்து, குணம், சுபாவம், முற்போக்குப் பிற்போக்கான தன்மை, அவர் வகிக்கும் உத்தியோகத்தில் உள்ள வசதிகள் இவையெல்லாம் எப்படி என்று ஒருகால் வேதையஞ் செட்டியாரால் சொல்ல முடியும். ஆனால் அவரிடம் விவரம் கேட்கிற சாக்கில் வாயைக் கொடுத்து விட்டால் போதும்; பெரிய காலக்ஷேபம் அல்லது புராணம் ஒன்று கேட்பது போலத் தான். அவன் ஒன்று கேட்டால் மன்னன் ஒன்று சொல்லத் தொடங்கி, எங்கேயோ போய் வந்து விடுவார். அப்போதுள்ள மனநிலையில் அவனுக்கு அது ஒரு பெரிய சோதனையாக இருக்கும். ஏன் வம்பு என்று இரண்டு ஒன்று கேட்க எண்ணியவன் வாயை மூடிக்கொண்டு தன்னை அடக்கிக்கொண்டு விட்டான்.

ஏதோ உள்ளே வைத்ததை எடுக்கப் போவதுபோல எழுந்து சென்றான். அங்கே முன்பு அவன் உட்கார்ந்திருந்த சோபாவில் குந்தளா மட்டும் உட்கார்ந்து அன்றைத் தினசரியைப் படித்துக் கொண்டிருந்தாள். நடராஜனுக்கு இந்தக் காட்சி ஒரு பெரிய ஆறுதலைத் தந்தது. ஓஹோ, படித்தவள்தான். அரைகுறைப் படிப்பு என்றால் ஆங்கிலத் தினசரியைப் படித்துப் புரிந்துகொள்ள முடியுமா?

"புஷ்பா எங்கே, உள்ளே போய் இருக்கிறாளோ?" என்று கேட்டபோதுதான் குந்தளா தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இப்போது அவள் விசுக்கென்று எழுந்திருக்கவில்லை. தத்திக் குதிக்கவில்லை. மிகுந்த நிதானத்துடன் தலைநிமிர்ந்து ஆற அமர அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். கெண்டை மீனைப் போன்ற அவள் கண்களின் அழகை அவன் இப்போதுதான் வெகு அருகில் நின்று கண்டான். இமைகள் எல்லாம் சிரிப்பது போல இருந்தன. அவள் கையிலிருந்த தினசரியை மேஜைமீது போட்டுவிட்டு, 'ஆமாம்' என்பதுபோல் தலையை அசைத்தாள்.

நடராஜன் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மனசுக்குள்ளாக மகிழ்ச்சியுற்றான். ஆயினும் இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னையும் அவளையும் எதிர்பார்த்தபடி எல்லாம் பேசவே விடாமல் செய்த லஜ்ஜையைக் கண்டு அவனுக்குக் கோபந்தான் வந்தது. வாயை விட்டு ஓர் அக்ஷரங்கூட வர மறுத்துவிட்டது. சில விநாடிகள் அவன் தயங்கி நின்றுவிட்டு, "இதோ வாசலில் வந்திருக்கிறாரே அவர் உன் சிறிய தாத்தாவாமே?" என்றான்.

அவள் பதில் சொல்லாமல் அவன் கண்களையே உற்றுப் பார்த்தாள். அந்தத் தோரணையே அவனுக்கு மிகவும் பிடித்தமானதாய் இருந்தது. அந்தப் பார்வைக்கு எதிரே முன்பின் பழக்க

மில்லாத ஒரு யுவதியை ஏக வசனத்தில் அழைத்து நிற்கும் அவன் ஒரு துச்சமான பொருளாக அவனுக்கே தென்பட்டான். இருந்தாலும் அவன் ஏதோ ஒரு வேகத்தில், "தேரடித் தெருவில் உங்கள் வீட்டு நம்பர் என்ன?" என்றான்.

அவள் தன் பார்வையாலேயே அவனைக் குன்றச் செய்தாள். 'ஏன் இந்த விசாரம் உங்களுக்கு?' என்பது போன்ற பாவத்துடன், "நூற்று ஒன்பது" என்றாள்.

"உன் அப்பாவைப் பற்றி இவர் சொன்னார். அவரை ஒரு தடவை வந்து பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதனால்தான் கேட்டேன். நீ வித்தியாசமாய் எண்ணவேண்டாம்! அது சரி; புஷ்பா ஏன் உன்னைத் தனியாக உட்காரவைத்து விட்டுப் போயிருக்கிறாள்?" என்றான் நடராஜன்.

குந்தளாவின் இமைகள் மீண்டும் சிரித்துக்கொண்டிருந்தன. "அவள் என் வீட்டுக்கு வருகிறேன் என்றாள். வேறு ஆடை உடுத்துக்கொண்டு வரச் சென்றிருக்கிறாள். இப்போது வந்து விடுவாள்" என்றாள்.

பேசுவதற்கு வேறு விஷயம் எதுவுமே கிடைக்கவில்லை. அவளுடைய குரலில் எவ்வளவு இனிமை இருந்ததோ அவ்வளவு நறுக்குத் தெறித்ததுபோன்ற கண்டிப்பும் உறுதியும் இருந்தன. அவனோடு பேச விழைகிற துடிப்பையே அவளிடம் காணவில்லை. சாதாரண மத்திய வகுப்புக் குடும்பத்தில் பெண்களிடம் சகஜமாகக் காணப்படும் நாணத்தின் நுண்ணிய நெகிழ்ச்சியோ, பதற்றமோ அவளிடம் தென்படவில்லை.

நடராஜன் ஆங்கிலத் தினசரியைக் கையில் எடுத்துக் கொள்ளுகிற சாக்கில் மேஜையண்டை நெருங்கி, "காலேஜில் படிக்கிறாயோ?" என்றான்.

அவள் தலையை அசைத்தாள்.

"க்வீன் மேரீஸ்தானே?"

அவளுடைய கண்கள் 'ஆம்' என்று பதிலளித்தன.

"எந்த வகுப்போ?"

"செகண்டு யு. ஸி."

"தேவலையே. அதற்குப் பிறகு?"

"டாக்டருக்குப் படிக்கலாம் என்று எண்ணம்."

"ஓ! டாக்டராக ஆன பிறகுதான்......"

அவள் அவனை நேரிடையாகப் பார்த்தாள். "ஆனபிறகு தான்...... என்ன, முடியுங்களேன் வார்த்தையை!" என்றாள்.

"ஊஹும்; டாக்டருக்குப் படிப்பதுபற்றி எனக்குச் சந்தோஷந்தான் என்று சொல்ல வந்தேன்" என்றான் நடராஜன்.

"படிப்பது பற்றி அல்ல; படிக்கப் போவதுபற்றி. அப்படித் தானே?"

"ஆமாம்..."

நடராஜனுக்கு மேலே அங்கே நின்று பேசும் துணிவோ, பேசக் கூடிய விஷயங்களோ உதிக்கவில்லை. இதற்குள் நல்ல காலமாகப் புஷ்பா வந்து விட்டாள். குந்தளா உட்கார்ந்திருப்பதையும் நடராஜனின் தர்ம சங்கடமான நிலையையும் அவள் மேலோட்டமாகப் பார்த்துக்கொண்டு இருவரையும் மாறிமாறிப் பார்த்துப் புன்னகை செய்தாள். நடராஜன் அந்தப் புன்னகையின் பொருளை ஊகிக்க முடியாதவனாக வெளியே சென்றான். என்ன காரணத்தினாலோ உள்ளே எழுந்து சென்றது அவனுக்கு மகா தவறு என்று பட்டது. அதைவிட அவளிடம் வலுவில் பேசப் போனதும் அவர்களுடைய வீட்டு விலாசத்தைக் கேட்டதும் மகத்தான கேவலமாக அவனுக்குப் பட்டது. வெளியில் வந்ததும் செட்டியார் பேசத் துடித்துக்கொண் டிருப்பதைக் கண்டு, தினசரிப் பேப்பரால் முகத்தை மறைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

"பெரிய அம்மாளைக் காணவில்லையே. உள்ளே இருக்காங்களோ?" என்றார் செட்டியார்.

நடராஜன் பதில் சொல்ல விரும்பாமல் முகத்தை மறைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

சற்றைக்கெல்லாம், "வீட்டுக்குப் போகிறேன்" என்று குந்தளாவின் குரல் கேட்டது. அவன் உடனே பேப்பரை மடித்துக்கொண்டு திரும்பினான். வேதையஞ் செட்டியாரிடம் குந்தளா விடைபெற்றுக்கொண் டிருந்தாள். இவன் திரும்பியதும் இவனையும் ஒரு முறை பார்த்துவிட்டுப் புஷ்பாவுடன் கிளம்பினாள். அவளுடைய பார்வை அவனிடமும் சொல்லிக்கொண்டு போவதாகவே அவனுக்குப் பட்டது. திருப்பத்தில் மறையும் வரையில் அவர்களைக் கவனித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். அவர்களில் ஒருத்தியாவது திரும்பிப் பார்க்கிறாளா என்று அவன் மனசு எதிர்பார்த்தது. கடைசிவரையில் ஏமாற்றந்தான்.

"மதகடிப் பங்கு இருக்குங்களே, அது மொத்தம் ஒரு வேலி. இப்ப நம்ப கடனுக்கு அதிலே சரிபாதி கொடுத்துட்டாக்கூட

இன்னி வெலேக்கு நம்ப கடன் தீர்ந்து போவுது. இதுக்குப் பண மாக் கொடுங்கன்னு நான் கேக்கல்லே. பணம் புரட்டறதுன்னு சும்மவா இருக்கு? ஐயாவுக்கு இந்தப் பங்குகளைக் கொடுத்துத் தீக்கறது ஒரு பெரிசு இல்லே. வட்டி எல்லாம் உட்பட நமக்கு ஐயா தரவேண்டிய தொகை—கணக்குப் போட்டுப் பாத்துப்புட்டேன்- ஐயாயிரத்துத் தொள்ளாயிரம்! அதாவது ஆறு ரூபாய்க்கு ஒரு நூறு குறைச்சல். என்ன, நான் சொல்றது புரியுதுங்களா? உங்களுக்கு இந்தத் தொகை கொடுக்கவேண்டியது குறைஞ்சா நல்லதுதானே! ரொக்கமாத் தீக்கறது எப்படி? ஒரு பொருளைக் கொடுத்து அந்தப் பணத்தை வேற ஒரு காரியத்துக்கு உபயோகிச்சுக் கொள்றது எப்படி?" என்று மூச்சுவிடாமல் பேசினர் செட்டியார்.

"நீங்க சொல்றதெல்லாம் நியாயந்தான்!" என்று அவர் என்ன பேசுகிருர் என்பதைக் காதில் வாங்காமலே சொல்லி வைத்தான் நடராஜன்.

நல்ல காலமாக வேதையஞ் செட்டியாரிடமிருந்து தப்பித்துக் கொள்ள வசதியாக, பாங்குக்குச் சென்றிருந்த பிள்ளையவர்களின் வண்டி திரும்பி வந்து விட்டது. வேதையஞ் செட்டியார் இடுப்பில் மேல் துண்டை எடுத்துக் கட்டிக்கொண்டு பிள்ளையவர்களுக்குப் பணிவாகப் பெரிய கும்பிடு ஒன்று போட்டார்.

★ ★ ★

மத்தியான்னம் இரண்டு மணிக்குள் சுவாமிநாத பிள்ளை சீட்டுக் கொடுத்து அனுப்பியிருந்த அனைவரும் ஒவ்வொருவராக வந்து சேர்ந்து விட்டார்கள். நடராஜனும் பிள்ளையவர்களும் முதலில் தமக்குள்ளாகக் கணக்கைப் பார்த்துக்கொண்டு, இவ்வளவு ரூபாய் வட்டியில் தள்ளிக் கேட்கலாம் என்று பேசிக்கொண்டு ஒவ்வொருவரையும் தனியாக அழைத்துக் கணக்குத் தீர்ப்பதில் முனைந்தார்கள்.

வேதையஞ் செட்டியார் என்ற வேதையா பிள்ளையின் சகோதரர் குமாரசாமி பிள்ளைதான் தஸ்தாவேஜிகளை வைத்துக் கொண்டு, கணக்குப்புள்ளிவிவரங்களைத் தயாரித்துஉதவிபுரிந்தார்.

முதலில் காண்டிராக்டர் காதர் பாஷா ராவுத்தருடைய கணக்கு ஒருவிதமாக முடிந்தது. முக்கால் வட்டிக்குக் காதர் பாஷா எழுதி வாங்கியிருந்தாரே யொழிய இப்பொழுது மிகவும் தாராளமாக விட்டுக்கொடுத்து, பாங்கு வட்டியைப் போல வாங்கிக் கொள்ளச் சம்மதித்தார். இதைப் பார்த்ததும் வேதையஞ் செட்டியாருக்குப் பிரமாதமாகக் கோபம் வந்தது. ஆயினும் கோபத்தை யாரிடம் காட்டுவது? கொடுக்கிறவன் இஷ்டமும் வாங்குகிறவன்

இஷ்டமும் அல்லவா இதெல்லாம்? "அவருக்கு என்னுங்க! மீன் குத்தகையிலேயும் ரோடு காண்டிராக்டுலேயும் வந்த பணம். மத்தவங்களைப்போலக் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சிருந்தா வருத்தம் தெரியும்! அவரு இதுவும் தள்ளிக் கொடுக்கலாம்; வெறும் அசலாவேகூட வாங்கிக்கிடலாம். அவருக்கு என்ன நஷ்டமாயிடுமா?" என்று பேச்சோடு பேச்சாகக் குத்தலாகச் சொல்லியும் வைத்தார்.

வேறு யாருக்கும் இது அவ்வளவு உறுத்தலாகப் படவில்லை. குமாரசாமி பிள்ளைக்கு மட்டும் ரோஸமாக வந்தது. எஜமான விசுவாசத்தை அவர் எந்த நிலையிலும் காட்டி ஸ்தாபிக்கத் தவறுவதேயில்லை. அவர் வேதையஞ்செட்டியாரிடம் நேரிடப் பேசாமலேயே, "ஒருத்தரும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்காமே சுலபமாச் சம்பாதிச்சுடலே. புதையல் கிதையல் எடுத்துடவும் இல்லே. அதுவும் காதர் பாஷா வெயில்லேயும் மழையிலேயும் அலையருப்பலே அலைஞ்சு சம்பாதிக்கறவங்களுக்குத்தான் பணத்தோட அருமை தெரியும். இவனுக்கென்ன, பெட்டியடியிலே குந்திக்கிட்டு, மூக்கா வீசை மிளகாயை நிறுத்துப் போட்டுப்பிட்டு ஒண்ணரை வீசைன்னு எளுதி, கணக்கு ஏத்தினவன்தானே? தெரிஞ்சுபோய்க் கேட்டால், 'தெரியாமெ கைத் தவறுதலா எளுதிட்டேன்' என்கிறது. இல்லாட்டிப்போறு, போனதுதான். அந்த மாதிரி கொடுத்த கடனு இது? கட்டிமோட்டு வாய்க்கால் பாலத்தைக் கட்டறப்போ, 'என்ன ராவுத்தரே, ஐயா அனுப்பிச்சாங்க!' இன்னேன். 'என்ன விஷயம்?' இன்னாரு ராவுத்தரு. 'அவசரமா அஞ்சு ரூவா வேணுமே' இன்னேன். சாயபு ஒரு வார்த்தை பேசணுமே. தொப்பியைத் தூக்கினாரு. பச்சை நோட்டுக் கத்தை ஒண்ணை என்னண்டை கொடுத்து, "எண்ணிப் பாருங்க; பிள்ளை! கேக்கறது பெரிசில்ல. நம்ப வாப்பா ஈக்கிறுகள்ளே அவுக சொல்வாக. கேக்கற சமயத்திலே கையிலே பணம் ஈக்கிறது பெரிசும்பாக. இப்பத்தான் கசானுவுக்குப் போய் பில் பாஸான பணம் கொண்டாந்தேன்' இன்னு ஐம்பது நோட்டுக்களைக் கொடுத்தாரு. சும்மா வந்த பணமா அது? கை முதலையும் போட்டு அந்த வேகாத வெயில்லே நின்னும் பாத்தா அந்த வருத்தம் தெரியும்!" என்று பேசி முடித்தார், நடுநடுவில் தம்பியையும் பார்த்துக்கொண்டு.

எல்லோரும் குமாரசாமி பிள்ளை சொன்ன இந்த உணர்ச்சி மிகுந்த வரலாற்றைக் கேட்க மௌனமாக இருந்தார்கள். அதுவும் எஜமான் விஷயத்தில் தம்பி என்றும், உறவு என்றும்கூட நினைக்காமல் அவர் பேசியது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

வேதையஞ் செட்டியார் வரிந்துகட்டிக்கொண்டு சண்டைக்குக் கிளம்பியிருப்பார். அதற்குள் சுவாமிநாத பிள்ளை கையை அமர்த்தி, "உமக்கு வட்டியைத் தள்ளிக் கொடுக்க இஷ்டமில்லே. அவ்வளவுதானே? வேண்டாம். கணக்குப்படி என்ன ஆகிறதோ அதை வாங்கிக் கொள்ளுமேன்! வீண் வார்த்தை எதற்கு?" என்றார்.

"அவருக்கு மதகடி நிலம் வந்தால் போதுமாம். பணங்கூட வேண்டாமாம்" என்றான் நடராஜன்.

எல்லோரும் வேதையஞ் செட்டியாரின் பேராசையைக் கேட்டுக் கொல்லென்று சிரித்தார்கள். குமாரசாமி பிள்ளையும் எல்லோருடனும் சேர்ந்து சிரித்துவிட்டு, "கேக்கமாட்டானா? கேப்பான். மதகடி நிலம் என்ன, மற்றதையும் கொடுக்கிறதாக இருந்தாலும் கொடுன்னு கேப்பான். புதுப் பணமில்லே! அதன் குணத்தைக் காட்டாமல் போகுமா? ஐயாவே சம்மதிச்சுக் கொடுத்தாலும் கொடுப்பாங்க. ஆனால் என் உசிரு இருக்கிற மட்டும் நான் இந்தப் பண்ணை உப்பைத் தின்னதுக்காக இந்த அக்கிரமம் நடக்கமட்டும் சம்மதிக்கமாட்டேன். அது தம்பியாக இருந்தாலும் சரி, தாயாக இருந்தாலும் சரிதான். மத்தது ஒண்ணுமே வாண்டாமே; அந்த மதகடி நிலம் ஒண்ணு இருந்துட்டால் போதுமே. ஐயாயிரம் இல்லே; ஐம்பதாயிரம் கொடுத்திருந்தாலும் அந்த நிலத்தைக் கைவிட்டுக் கொடுத்துடறதா? நல்ல கதைதான்!" என்று ஆக்ரோஷமாகப் பேசினார்.

குமாரசாமி பிள்ளை பேசி முடித்ததும் மறுபடியும் ஒரு தடவை எல்லோரும் கேலியாகச் சிரித்தார்கள். வேதையஞ் செட்டியாருக்குக் கோபம் இப்போது கட்டுக்கு மீறிக் குமுறிக் கொண்டு வந்தது. இவ்வளவு நேரம் தாம் பேசியதெல்லாம் மிகவும் நியாயம் என்று ஏதோ ஞாபகத்தில் தலையாட்டிக்கொண்டு வந்த நடராஜசுந்தரம்கூட எல்லாரையும் மிஞ்சிவிடுவதைப் போலச் சிரித்ததைக் கண்டு அவர் மனம் கொதித்து எழுந்தது. அண்ணன் சொன்னதுகூட அவ்வளவாக அவருக்கு உறைக்கவில்லை. அது ஒரு விதத்தில் இயற்கையாகவும் சகஜமாகவும் இருந்தது. ஆனால் மற்றவர்களும் இந்த அண்ணனுடைய பொருமைப் பொறுமையைக்கண்டு மயங்கித் தம்மைக் கேலி செய்வதா என்று ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"உங்களுக்கு மதகடி நிலம் பெரிசின்னா, மத்தவங்களுக்கு அவங்க அவங்க வீட்டுப் பணம் மட்டும் பெரிசில்லையோ? பணத்தை வெறும் வட்டிக்கு ஆசைப்பட்டுத்தான் கடனாக நான் கொடுத்தேனா? அதுக்கும் ஒரு சௌகரியம் உண்டாகும்னுதானே

கொடுத்தேன்? வட்டிக்குப் போடணும்னு பாங்குலே கொண்டு போட்டா அப்பனுக்கு ஒரு குரல் அழுதுகிட்டு வட்டியைக் கொடுக் கறான்; வாங்கிக்கறோம். ஏதோ நிலமா நீச்சா கிடைச்சுச்சுன்னு நம்ம புள்ளைக் குட்டிகளுக்கு ஒரு நன்மையாச்சுன்னுதானே கடனை இவ்வளவு நாளும் விட்டு வச்சிருந்தது. நெடுங்குடிப் பிள்ளை எலெக்சனிலே தோத்ததும், 'செட்டியாரே! பூங்குடிப் பிள்ளை உமக்குப் பெந்தகம் வச்சிருக்காரே! அதை என்னிடம் மேடோவர் கொடுத்துடேன். இப்பொ நிலமும் பஞ்சத்திலே விளையாமெ கிடக்கறதுக்குக் கோர்ட்டுக்கு இழுத்து, ஐயாவைக் கொஞ்சம் வேடிக்கை பாக்கலாம். உமக்கும் வேணுங்கறது கையிலே தரேன்' இன்னு வண்டியைக் கட்டிக்கிட்டு வந்து நடையா நடந்து கெஞ்சினாரே! அப்போ நான் கொஞ்சம் அந்தப் பணத்துக்கு ஆசைப்பட்டிருந்தா அப்ப தெரியும் சேதி! இப்போ நம்பளை நகிடில்லே செய்யறீங்க. அப்போ, உங்களைப் பாத்து நாலுபேர் நகிடி செய்திருப்பாங்க. அப்போ இந்த வேதையஞ்செட்டி உதவி வேண்டியிருந்திச்சு. இப்போல்ல வட்டியைக் குறைக்காமெ வாங்கிக்கன்னு ஐயா பேச வர்றீங்க. முந்தி அந்தப் பேச்சைக் காணமே! மதகடி நிலத்தையே நம்ப பேருக்கு வித்துடறதாச் சொன்ன சேதி இப்போ மருமவப் பிள்ளை பொண்ணைக் கட்டிக்க வும் கடனை அடைக்கவும் பணத்தை எடுத்துக்கிட்டு வந்ததும் ஐயாவுக்கு எல்லாமே மறந்துடுச்சு. அப்போ பணம் தேவையா னப்போ, 'ஆயிரத்தைக் கொடு; ஐந்நூறைக் கொடு'ன்னு வேதை யன் ஞாபகம் வந்துகிட்டிருந்தது. அப்போ வர்றதுதானே இதே மருமவப் பிள்ளையின் பணம்? இவுரு அப்போ எங்கே போனாரு? அதென்ன பணம் வந்துட்டா ஒரு பேச்சு; வராட்டா ஒரு பேச்சா? நாக்கு ஒண்ணு, ரெண்டா?" என்று ஆக்ரோஷத்துடன் எகிறிக் குதித்தார் செட்டியார். நிலப் பேச்சை இனிப் பேச முடியாது என்று ஏற்பட்டதும் அவருக்குத் தம் எண்ணத்தையே வெளிப் படையாக வெளியிட்டுப் பேசாமல் வேறு வழியில்லை.

"மதகடி நிலத்தை நான் என்னிக்கும் உமக்கே கொடுத்துடற தாகச் சொல்லவில்லையே!" என்றார் சுவாமிநாத பிள்ளை.

"அப்படிப் பச்சையா நீங்க சொல்லலேதான்! ஆனால் அப் படி மனசுக்குப் படும்படியா மட்டும் பேசினீங்க. இப்பல்ல தெரியுது நீங்க ஏன் அப்படிப் பேசாமே சூழ்ச்சியாப் பேசியிருக் கீங்கங்கிறது? இப்பவும் என்ன? ஒரே பேச்சு; எனக்கு வேண்டி யது பணமில்லே. மதகடி நாத்தங்கால் பங்குகள்தான். சம்மதம் இருந்தால் கொடுங்க. இல்லாட்டி பணமாத்தான் வாங்கிக்கணும்னு சொன்னீங்க, அதை நான் வாங்குவானேன்? நம்ப வக்கீலையா மூலமாக் கொடுங்க; வாங்கிக்கறேன். எங்க வீட்டுப் பணம்னு

அவ்வளவு கிள்ளுக் கீரையல்ல! நானும் நம்ப ஐயாவாச்சேன்னு இதுவரை பொறுத்துக்கிட்டு இருந்தேன். இனி எப்போ உங்க அபிப்பிராயமும் மோசக் கருத்தும் தெரிஞ்சுதோ அப்போ நாம் பளும் அதுக்குத் தகுந்தாப்பலேதானே இருக்கணும்!" என்றார் செட்டியார்.

"மதகடி நிலத்தை மறந்துவிடும் பிள்ளைவாள்! பணமாக வேணுமானால் இதோ, இப்பவே வாங்கிக்கொள்ளும். காதர் பாஷா கூட ஒரு வாரம் கழிச்சு வாங்கிக்கிறதாச் சொன்னார். உமக்கு இப்பவே ரெடி காஷ்!" என்றான் நடராஜசுந்தரம்.

"அப்போ அது கோர்ட்டு மூலமோ, வக்கீல் மூலமோ வரட்டும். நான் கை நீட்டி வாங்க மாட்டேன்" என்று எழுந்து இடுப்புத் துணியை உதறிக்கொண்டு வெளியே சென்றார் செட்டியார்.

★ ★ ★

**ம**றுநாள் காலையில் செட்டியார் பட்டணத்தில் உள்ள நடராஜசுந்தரத்தின் வீட்டு வாசலில்தான் காணப்பட்டார். பெரிதாக ஒரு கும்பிடு போட்டுக்கொண்டே, "அம்மா! நான்தான், பூங்குடி வேதையஞ்செட்டி, வந்திருக்கிறேன். உங்களைப் பார்த்து ஒரு முக்கியமான சேதி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். தாவத்துக்கு ஏதாவது வச்சிருக்கீங்களா? இல்லே கிளப்புக்கே போயிட்டு வந்திடட்டுமா?" என்று கூச்சம் நாச்சம் எதுவும் இல்லாமல் கேட்டார் செட்டியார்.

நடராஜசுந்தரத்தின் தாய்க்கு உதறல் கண்டுவிட்டது. அவளுக்கு இருப்பது ஒரே பிள்ளை. பூங்குடிக்குப் போனவனுக்கு என்னவோ ஏதோ என்று அவளுக்கு ஒரு கணம் கதிகலங்கியே விட்டது.

"நல்லாயிருக்கு! வந்தவரு உக்காரக்கூட உக்காராமெ—நல்லாயிருக்கு! ஆமாம்; ஊரிலே ஒண்ணும் விசேஷமில்லையே? நம்ப தம்பி சௌக்கியமாய் அங்கே வந்துட்டானில்லே! அவன்......"

"தம்பி வந்திருக்காரு. அது சம்பந்தமாத்தான் நானும் இங்கே வந்திருக்கிறேன்!" என்று அவள் திகிலை மேலும் கிளறிவிட்டார் செட்டியார்.

"என்ன வேதையஞ் செட்டியாரே! விஷயத்தைப் பளிச்சுன்னு உடனே சொல்லுங்க. அவனுக்கு ஒருவித ஆபத்தும் இல்லையே!"

"சரியாப் போச்சு! பயந்தா போயிட்டீங்க? ஆபத்து ஆளுக்கு வந்தாத்தானா? வேறு மாதிரியான ஆபத்து ஒருத்தருக்கும் வர்றது இல்லையா? முப்பதாயிரம் ரூபாய்னா கொஞ்சமா, நஞ்சமா? முப்பதாயிரத்துக்கு மூணு லகரத்தோடே நம்ப தம்பிக்குப் பொண்ணு கிடைக்காது? தம்பி என்ன இருந்தாலும்

இந்தக் காலத்துப் பிள்ளை. அநுபவம் பத்தாது! அவ்வளவுதான்! யாராவது இந்தக் காலத்திலே அதுவும் முப்பதாயிரம் ரூபாயைக் கண் தெரிஞ்சு, சமுத்திரத்திலே போடுறாப்பலே போடுவாங்களா? நீங்க இருந்துமா இந்த மோசத்துக்கு இடம் கொடுத்திட்டீங்க! பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறேன்னு சொல்றாப்பலே சொல்லி, ஊருக்குப் அழைச்சுப் போயி, பொண்ணை விட்டுத் தனுக்காப் பேசக் கொள்ளச் செய்து, என்னம்மா இது! கூடப் பொறந்த சொந்த சகோதரி மகன்னுகூடப் பாக்காமெ......"

நடராஜசுந்தரத்தின் தாய் கற்பகவல்லியம்மாளுக்குச் செட்டியார் சொன்னதில் ஓர் எழுத்துக்கூடத் தவறுதலாகப் படவில்லை. அவள் என்ன நினைத்தாளோ அதையே அல்லவா செட்டியார் சொல்கிறார்! கமுக்கமாக மருமகனுக்குக் கடிதம் எழுதி, ஆசை வார்த்தையெல்லாம் காட்டி, பணத்தைக் கொண்டு வரும் படி செய்துவிட்டாரே மனுஷ்யன்! செட்டியார் மர்ம அடி கொடுப்பது போல, எதை எங்கே தட்டினால் உடலே துவண்டு விடும் என்பதை உணர்ந்தவர் போல, மேலும் மேலும் அவள் மனசில் ஒரு பீதியைக் கிளப்பிவிட்டார். கற்பகவல்லியின் அகக் கண்ணெதிரே அவளுடைய ஒரே மகனை நடராஜசுந்தரம் பணத்தையெல்லாம் இழந்து, பெண்டாட்டி லோலனாகி, கதியற்று நிற்பதைப்போல ஒரு சித்திரத்தை எழுப்பினார்.

"பணம் கொடுத்து ஒத்தாசை பண்ணட்டும்; போவட்டும்; வேண்டாங்கலே. ஆனா தம்பி போய்த்தான் இதையெல்லாம் தீர்த்து வைக்கணுமோ? மோச எண்ணம் இல்லாத மனுஷ்யன் உங்ககிட்டேயிருந்து தம்பியைப் பிரிச்சு அழைச்சுக்கிட்டுப் போவானேன்? நீங்க இனி வந்து ஆயிரம் சொல்லுங்க, உங்க பிள்ளை கிளம்பி வருதா பாருங்க! அதனாலேதான் நான் பார்த்தேன்; பணத்தை வக்கீல் மூலமா வாங்கிக்கிறேன்னுட்டு, கோவிச்சுக் கிட்டு வந்திட்டேன். இப்பவும் ஒண்ணும் தலைக்கு மேலே போயிடல்லே. நீங்க நேரே போயி எல்லாருக்கும் பணத்தைக் கொடுத்துத் தீக்கறதுக்கு முந்தி, கொஞ்சம் புத்திசாலித் தனமா பணத்தைக் கையிலே வாங்கிக்கிட்டீங்கன்னா எல்லாம் சரியாகப் போயிடும். இது ஒண்ணும் பெரிய காரியமில்லே. ஆனா உங்க தம்பி நீங்க சொல்றதைக் கேக்கும்னு எனக்குத் தோணல்லே. அவ்வளவு தூரம் அதன் மனசை எல்லாருமாச் சேர்ந்து கழுவாக் கரைச்சு வச்சிருக்காங்க! நான் சொல்றது சரியா தப்பான்னு நேரிலே வந்து பாத்து, தெரிஞ்சிக்குங்களேன், உங்க மனசுக்கு" என்று சரியான படி தூபம் போட்டார்.

கற்பகவல்லியம்மாளுக்கு ஏற்கனவே இருந்த சந்தேகமும் அதிருப்தியும் பன் மடங்கு இப்போது வளர்ந்தன. 'எனக்கு

இல்லாத சொந்தமும் உறவும், அக்கறையும் ஆசையும் இவனுக்கு என்ன வந்துட்டுது? வாணியம்பாடியிலேருந்தும் கோயம்புத்தூரிலேருந்தும் வந்த பொண்களை யெல்லாம் தட்டிப்பிட்டு, இந்தச் சகதியிலே போய் விழுந்திட்டானே!" என்று அவளுக்கு மகா ஏமாற்றமாய் இருந்தது. உடனேயே நேரில் புறப்படத் தயாராகி விட்டாள்.

"எங்கேயோ கடைக்குச் சரக்குகள் வாங்க வந்த இடத்திலே உங்களையும் பார்த்து, என் மனசிலே பட்டதைச் சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன். கடைசியிலே நம்ப நிலைதான் உருளப் போகுது. வேறே காரியம் ஒண்ணும் ஆகப் போறதில்லே! அதனாலே தயவு பண்ணி உங்களைக் கேட்டுக்கறதெல்லாம் என் பெயரை இழுத்துவிட வேண்டாம் எங்கிறதுதான். என்னை இவங்க ஒண்ணும் செய்துப்பிட முடியாட்டாலும் இதெல்லாம் உங்களுக்கே தெரியாததுபோல நானும் வந்து சொன்னதாக இருப்பானேன்! ஏன், நான் சொல்றதுலே தப்பு ஏதாவது......?" என்றார் செட்டியார்.

"நல்ல கதைதான். என்னை என்ன ஒண்ணும் தெரியாதவள்னு எண்ணிக்கிட்டீங்களா? எனக்குத் தெரியாதா நல்லவங்களையும் பொல்லாதவங்களையும் பத்தி!......" என்றாள் கற்பகவல்லி.

"இப்ப நீங்க போயும் காரியம் ஒண்ணும் ஆகப்போறதில்லே. நடக்கறது நடக்கத்தான் போகுது. போகிற பணம் போகத்தான் போகுது. நடுவிலே நாம்ப மனசைக் கஷ்டப்படுத்திக்கறோமே, அதான் மிச்சம்!" என்றார் செட்டியார் சாமர்த்தியமாக.

"அதையுந்தான், நடக்குதா இல்லையான்னு ரெண்டுலே ஒண்ணு பார்த்துப்பிடறேனே" என்று ரோசம் தாங்காதவளாகப் புறப்பட்டாள் கற்பகவல்லியம்மாள்.

செட்டியார் நன்றாக உருவேற்றி விட்டார். அவருடைய மந்திரம் நன்றாக உருவேறி வேலை செய்யத் துவங்கிவிட்டது. அந்தத் திருப்தியுடன் அவர் வெளியேறி, போன சுவடு வந்த சுவடு தெரியாமல் எங்கேயோ பக்கத்து டவுனுக்குப் போய்விட்டு வருகிறவர் மாதிரி ஊருக்கு வந்துவிட்டார்.

★ ★ ★

ஷண்முகம் மறுநாள் வரப் போவதாகச் சுவாமிநாத பிள்ளைக்குக் கடிதம் வந்திருந்தது. நடராஜனுக்கும் அவனைப் பார்க்கப்போகிறோம் என்று ஆனந்தமாக இருந்தது. சிறு வயதில் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தது. பூங்குடிக்கு இருவரும் ஒரே சமயத்தில் வந்திருந்தார்கள். இரண்டு பேரும் கிட்டத்தட்ட ஒரே வயதினர். ஒரே கிறம். ஆனால் இரண்டு பேருக்கும் சதா போட்டி

தான். இருவருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் வாய்ச் சண்டையிலிருந்து கைச் சண்டை வரையில் போய் ரத்தம் பெருகத் தொடங்கி விட்டது. அப்பொழுது யாரோ ஒரு பண்ணைக்காரன் வந்து இருவரையும் விலக்கிவிட்டிராவிடில் யாருக்கு அங்கஹீனமே ஏற்பட்டிருக்குமோ, தெரியாது. அப்பொழுது ஏற்பட்ட காயத்தின் வடு இப்பொழுதும் அவன் கால் ஆடு சதையில் இருந்தது. ஆனால் இன்று அந்த வடு பழைய குரோதத்தையெல்லாம் மறந்து, அன்று இருந்த அறியாமையைக் கண்டு எள்ளி நகைக்கிற சின்னமாக விளங்கியது.

ஷண்முகம் அப்போது நல்ல சிவப்பாக இருந்தான். கொழு கொழு என்று காளைக் கன்றைப் போலிருந்தான். பிறகு அவனைப் பற்றி அவன் கேள்விப்பட்டுத்தான் வந்தான். நடராஜன் பி. ஏ. படிக்கும்போது அவனும் சிதம்பரம் காலேஜில் பி. ஏ. படித்துத் தேறிவிட்டான். அவனும் அவன் தம்பியும் ஆக இரண்டே பேர்கள்தாம் அவர்கள் பெற்றோர்களுக்கு. அதனால் ஷண்முகம் வேலைக்குப் போவதற்கு முடியவில்லை. குடும்ப நிர்வாகத்தை அவனே கவனிக்கவேண்டியிருந்தது. இல்லாவிட்டால் பூர்விகமாக உள்ள அத்தனை நிலங்களையும் வைத்துக்கொண்டு சுவாமிநாத பிள்ளையைப் போல் கடனாளியாக வேண்டியதுதான். அவன் தம்பி நித்திய நோயாளி. படிக்கவும் முடியவில்லை; படிப்பும் ஏறவில்லை. ஷண்முகம் இப்போது வயதில் அவனை ஒத்தவனாக இருந்தபோதிலும் பொது விவகாரங்களில் கலந்துகொண்டு ஒன்றைச் செய்வது, செய்யாதது முதலியவற்றைத் தீர்மானிக்கும் பெரிய பொறுப்பையெல்லாம் அவன் நிர்வகித்து வருவதாக நடராஜன் கேள்விப்பட்டான். யாரைக் கேட்டாலும் ஷண்முகத்தைப் பற்றி மரியாதையாகப் பேசினார்கள். அவன் அடிக்கடி சுவாமிநாதபிள்ளையின் கிராமத்துக்கு வந்து போவதுண்டு. அதனால் அவனுடைய கெட்டிக்காரத்தனமும் இங்கே பிரசித்தமடைந்தது. நடராஜனைப் பார்த்த சிலர் ஷண்முகத்தின் தம்பியோ என்றுகூட முதலில் விசாரித்தனர். இந்த மாதிரி அவன் மனசில் ஷண்முகத்தைப் பற்றிய ஓர் உயர்ந்த சித்திரம் உருவாகி வந்து, அவனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலை அதிகப்படுத்தியது.

ஆனால் புஷ்பா அவ்வளவு உற்சாகமாய் இல்லை. "ஷண்முகம் நாளைக்கு வரப் போகிறானமே!" என்று அவளிடம் கேட்டான் நடராஜன். பார்க்கப்போனால் இதை அவன் புஷ்பாவிடம் பிரஸ்தாபித்திருக்கவே மாட்டான். அவளோடு குந்தளா ஏதோ பேசி விளையாடிக்கொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடுவானேன் என்றுதான் புஷ்பாவிடம் இதையே ஒரு சாக்காகக் கொண்டு பேசப் போனான் நடராஜன்.

உடனே புஷ்பா அலட்சியத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பிறகு கேலியாகச் சிரித்துக்கொண்டு, "என்னிடம் இதைச் சொல்வதைவிட இதோ இவளிடம் சொல்லுங்கள்!" என்றாள்.

நடராஜன் முகம் வாடி விட்டது. குந்தளாவிடம் இதற்குள் புஷ்பாவுக்குப் பொறாமை ஏற்பட்டுவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. ஆனால் குந்தளாவோ அமைதியுடன் நீண்ட கண்களால் அவனை லஜ்ஜையின்றிக் கூச்சமின்றிப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். நடராஜனால் அதற்குமேல் அங்கே நிற்கமுடியவில்லை. பேசாமல் திரும்பினான்.

"அத்தான்!" என்று குழைவாக அழைத்தாள் புஷ்பா.

நடராஜசுந்தரம் திரும்பிப் பார்த்தான்.

"அந்த அத்தானைத்தான் குந்தளாவுக்குத் தெரியும். அந்த அத்தான் எப்போது இங்கே வந்தாலும் குந்தளாவோடு பேசிப் பொழுது போக்காவிட்டால் அவருக்குப் இருப்பே கொள்ளாது. அதனால்தான் சொன்னேன். இல்லையா குந்தளா?" என்றாள் புஷ்பா.

நடராஜன் அந்த இரு பெண்களையும் மாறி மாறிப் பார்த்தான். புஷ்பாவின் முகத்தில் அன்பும் குறும்பும் கலந்து விளங்கின. குந்தளாவின் முகத்தில் நாணமும் ஏக்கமும் கலந்து ஒளி வீசின. ஒருகணம் இரண்டுபேருமாகச் சேர்ந்துகொண்டு தன்னைப் பரிகாசம் செய்கிறார்களோ என்று எண்ணித் திரும்ப நினைத்த அவன் மனசுக்கு இந்தக் காட்சி ஓர் ஆறுதலாக இருந்தது.

புஷ்பாவின் பேச்சில் ஒருவிதக் கவர்ச்சியும் குந்தளாவின் முகத்தில் ஒருவிதக் கவர்ச்சியும் கண்ட அவன் மனம், 'பெண்களே ஒரு புதுமை. அருகில் நெருங்கிப் பார்த்தால்தான் அந்தப் புதுமையில் நுட்பமான அழகு இருப்பது தெரிகிறது. ஆனால் அந்த அழகுக் கதிர்கள் நெருப்பைப்போல அல்லவா சுடுகின்றன!' என்று எண்ணமிட்டது.

* * *

சுவாமிநாதபிள்ளைக்கு ஏதோ சொர்க்கத்தில் இருப்பது போல இருந்தது. வேதையஞ் செட்டியாருடைய கணக்கைத் தவிர மற்றவர்களுடைய கணக்கையெல்லாம் பார்த்தாகிவிட்டது. ஆனால் இரண்டு நாட்களாக நாள் அவ்வளவாக நன்றாக இல்லை என்று குமாரசாமிபிள்ளை சொன்னதனால் பணத்தை இரண்டு நாளில் பட்டுவாடா செய்வதாக ஏற்படாகியிருந்தது. சுவாமிநாத

பிள்ளை சம்பந்தப்பட்டவரையில் அவர் இன்று முதல் கடனாளி யில்லை என்றே ஓர் அபிப்பிராயம் கொண்டார். நடராஜசுந்தரத் திடம் மொத்தமாகக் கடன்படுவது அவருக்குக் கடனாகவே தோன்ற வில்லை. அவனுக்கு அவர் இன்னும் எவ்வளவோ செய்யக் கடன் பட்டிருந்தார். அதோடு இதுவும் ஒன்று என்றுதான் அவருக்குத் தோன்றியது. மைத்துனன் மகன் ஷண்முகம் எவ்வளவோ நல் லவன்தான். இருந்தாலும் சுவாமிநாதபிள்ளைக்கு நடராஜசுந்தரத் திடம்தான் தனி அபிமானமும் தம்முடையது என்ற எண்ணமும் இருந்தன. அதன் காரணமாகத்தான் புஷ்பாவை நடராஜசுந் தரத்துக்கே கொடுத்துவிடுவது என்று அவர் முடிவு கட்டியிருந் தார். ஒவ்வொன்றும் அவர் விருப்பத்துக்கிசைய நடந்துவந்தது. கண்டு அவர் ஆனந்த பரவசமானார். ஆகாய வீதியிலேயே பறப் பது போலவும் தீர்க்கமுடியாமல் சிக்கலாகக் கிடக்கிறது என்று எண்ணிய பிரச்னைகள் யாவும் துச்சமாகவும் இன்று அவருக்குப் பட்டது. அடிக்கு ஒரு தரம் நடராஜனை எதாவது விசாரித்து உபசரித்தார். உள்ளுக்கும் வாசலுக்கும் மாடிக்கும் கீழுக்குமாக நடை பழகினார். புஷ்பாவும் நடராஜனும் பேசிக்கொண்டிருப் பதைப் பார்த்தால் அப்படியே ஒரு சுற்றுப் பூரித்துப் போனார். மலையாக இருந்த விசாரமெல்லாம் பனியாறாகக் கரைந்து ஓடி யது போல் இருந்தது.

மறுநாள் காலையில் எழுந்ததுமே, "எங்கே, நடராசு எழுந்து விட்டானா? காபி சாப்பிட்டானா?" என்று மனைவியை விசாரித் தார்.

"நல்லாத்தான் இருக்குது 'நடராசு' விசாரணை. அது அதுக் குள்ளே எழுந்திருக்குமா என்ன? தெரியாமக் கேக்கிறீங்களே!" என்றாள் பிள்ளைவாள் மனைவி.

மணி ஒன்பது இருக்கும். பிள்ளைவாள் கற்பனைக் கோட் டைகள் எல்லாம் கட்டிக்கொண்டு வாசலில் கிடந்த சாய்வு நாற் காலியில் உட்கார்ந்திருந்தார். 'எதுத்த தோட்டம் வரைக்கும் அடைச்சுக் கல்யாணப் பந்தல் போடணும். மேலண்டைப் புற மாகக் கச்சேரி செய்யற மேடை கட்டவேண்டும். கஜத்துக்கு ஒரு பல்பாகப் பந்தலை அடைத்து விளக்குப் போடவேண்டும். நியோன் ஸைன் விளக்கிலேயே 'வெல்கம்' எழுத்துப்போட வேண்டும். தோர்ச்சீலை வாங்கிக் கட்டவேண்டும். நுங்குக் குலையும் ஈச்சங் குலை யும் இளநீர்க் குலையும் இங்கே இங்கே கட்டவேண்டும்... அப்புறம் டவுனில் இருக்கிற மரவாடியிலிருந்து ஆயிரம் மடக்கு நாற்காலி யாவது வாடகை பேசி லாரியிலே கொண்டு வந்து போடவேண்டும். இதுக்கே பத்து ருபாயாவது இல்லாமல் முடியுமா? அப்புறம் கல் யாணச் செலவு, சாப்பாட்டுச் செலவு, கச்சேரிச் செலவு, ஜவுளி,

பாத்திரம் பண்டம், நகை நட்டு, போக்குவரத்து—ஆகக் குறைந்தது முப்பது ரூபாய் வேண்டும். இரண்டே வருஷம். பூமித்தாய் மட்டும் கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்க்கணும். இவ்வளவு நாளும் பாரா முகமாய் இருந்ததுமாதிரி இருந்துவிட்டாளோ கடன் தான். கடனிலேயே மூழுகவேண்டியதுதான்; இருக்கட்டும்; கல்யாணத்துக்குன்னு பங்கு ஒதுக்கிவிட்டிருக்கிறதே, பார்க்கலாம்' என்றெல்லாம் குருட்டு யோசனை செய்துகொண்டிருந்தது அவர் மனசு.

தடதடவென்று வாசல் திருப்பத்தில் வண்டிச் சத்தம் கேட்டது. சுவாமிநாதபிள்ளை யோசனை தடைப்பட்டுத் திரும்பிப் பார்த்தார்.

வண்டி வாசலில் வந்து நின்றது. கற்பகவல்லியம்மாள் அதிலிருந்து இறங்கி வந்தாள். வண்டிக்காரன் அவளுடைய கைடிரங்குப் பெட்டியை எடுத்து வந்தான்.

திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் ஒரு வரி வரப் போவதைப்பற்றி எழுதாமல் ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு அவள் பூங்குடிக்கு வந்து இறங்கியதும் சுவாமிநாத பிள்ளைக்கு மட்டுமல்ல; எல்லோருக்குமே தூக்கிவாரித்தான் போட்டது.

'வா'வென்று வரவேற்ற அண்ணனிடமும் அண்ணியிடமும் அவள் சரியாக முகங்கொடுத்துக்கூடப் பேசவில்லை. 'அத்தை!' என்று ஆசையுடன் ஓடிவந்து அணைத்துக்கொண்ட புஷ்பாவையும் அவள் சரிவர ஏறெடுத்துப் பார்க்கவில்லை. எதையோ பறிகொடுத்தவளைப்போல முகத்தை 'உம்'மென்று வைத்துக்கொண்டு புன்சிரிப்புச் சிரிப்பது போலவும் அதையும் வேண்டாம் என்று அடக்குவதைப் போலவும் நடந்துவந்தாள். அருகில் நெருங்கிப் பேசவே சுவாமிநாதபிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் கொஞ்சம் யோசனையாக இருந்தது. தப்புச் செய்துவிட்ட பையன்களின் முன்னால் நிற்கும் ஹெட்மாஸ்டரைப்போல அவள் கடுந் தண்டனை விதிக்கப்போகும் வைராக்கியத்துடன் தென்பட்டாள்.

"ஏம்மா, நீ வரதாக ஒரு லெட்டர் எழுதப்படாது? ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பியிருப்பாரே மாமா!" என்றான் நடராஜன்.

"ஆமாம், அதொண்ணுதான் குறைச்சல். எனக்கு வண்டியென்ன, வாகனமென்ன! இரண்டு ரூபாயை விட்டெறிந்தால் வண்டி. நான் என்ன வண்டி சவாரி செய்யவா வந்தேன்!" என்று சீறி விழுந்தாள் கற்பகவல்லியம்மாள்.

நடராஜனுக்கு அவள் வந்த காரியம் எதுவென்று கிட்டத் தட்ட விளங்கிவிட்டது. ஏதோ பிரண்டு அடித்துக்கொண்டு அம்மா வந்திருக்கிறாள் என்பது வரையில் அவனுக்குத் தெரியும். மற்றவர்களும் வெளியில் சொல்லவும் மாட்டாமல் கேட்கவும் மாட்டாமல் இதே அபிப்பிராயந்தான் கொண்டிருந்தனர்.

"எல்லாருமாச் சேர்ந்துதான் என்னைத் தனியாக ஒதுக்கிப் பிட்டீங்களே! இனி என் தயவு என்னத்துக்கு உங்களுக்கு!" என்று 'பொத்தாம் பொதுவாகக் குறை சொல்லிக்கொண்டே முகம் கொடுத்துப் பேச மறுத்தாள். சரியாகச் சாப்பிட மறுத் தாள்.

தனியாக இருந்தபோது நடராஜன் வந்து, "இப்போ இங்கே என்ன நடந்துட்டுது? நீ அதுக்குன்னு ஓடியாந்தே! வந்தவ முகம் கொடுத்து ஏன் பேச மாட்டேங்கறே! யாரு இப்ப உன்னை என்ன சொல்லிட்டாங்க! நீ செய்யறது ஒண்ணும் நல்லால்லே!" என்றான்.

"ஆமாம் தம்பி! நான் செய்யறது பிடிக்குமா உனக்கு? உன் னைத்தான் மருந்து வச்சு மயக்கிப்புட்டாங்கம்பாங்களே, அதைப் போல மயக்கிப்புட்டாங்களே! அந்தப் பெண்ணுகிட்டே பல்லைக் காட்டிக்கிட்டு நிக்கணும்னு ஆசைப்படறே போலிருக்கு!" என்றாள் கற்பகவல்லி.

நடராஜனுக்கு இந்த வார்த்தைகள் மகா துன்பத்தைக் கொடுத்தன. அவளுடைய இந்தப் பதற்றத்திற்குத் தன் மீதுள்ள அளவு கடந்த வாஞ்சைதான் காரணம் என்று எண்ணி, "அம்மா, நீதான் பேசறியா? என்னை உனக்கு இவ்வளவு நாளும் தெரி யாதா? என்னையா, நம்ப மாமா மயக்கிப்பிட்டார் என்கிறாய்? இப்படியெல்லாம் பேசறது நியாயமில்லே அம்மா! நல்ல வேளை; அவர்கள் காதில் விழுந்தால் நம்மைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்றான்.

"நினைக்கிறது என்னத்தே. அறியாப் பிள்ளை நீ. உன்னை ஏமாத்திப் பணத்தை வாங்கிக்கிட்டு பொண்ணையும் உன் தலை யிலே கட்டிப் பெரிய நாமமாக் குழைச்சுப் போட எண்ணியிருக் காரு உங்க மாமா! நினைச்சுட்டுப் போவட்டுமே, எதை வேணுமானா லும்" என்றாள் அவன் தாய்.

"அபாண்டமா, அதுவும் நம்ப மாமாவைப் பற்றி எதுவும் சொல்லாதே! உனக்குக் கல்யாணம் காட்சி முதல் செய்துவைத்த அவர் உனக்குக் துரோகம் எண்ணமாட்டார். உனக்கு என்ன, யாருக்குமே எண்ணக்கூடியவரல்ல அவர். அப்படிப்பட்ட

வரைச் சொன்னல் நமக்கு ஒண்ணுமே ஒட்டாது!" என்ருன் நடராஜன்.

அவளுடைய மனசில் உண்மையைப் பதியவைக்க எண்ணிப் பேசிய இந்த வார்த்தைகள் அவளுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டன.

"எனக்கு ஒட்டாதுன்னு நீயேவா சொல்றே? எல்லாம் அவனும் அவளும் சொல்லிக் கொடுத்துல்லே சொல்றே! எனக்கு ஒட்டாமே போயிடம்னு உன்னைவிட்டே சொல்லச் சொல்லியிருக்தாங்களே! அவுங்களுக்கு இருக்கிற இரண்டும் ஒட்டுமா? எனக்கு இருக்கிற ஒண்ணையும் ஆகவிடாமே அடிச்சு, மனசைக் கலேச்சு, கொண்டாந்து வச்சுக்கிட்டு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொடுத்துச் செய்கிற மகா பாவிங்க! இதோ, இப்பவே கிளம்பு. இனி ஒரு 'க்ஷணம் இங்கிருக்க எனக்கு இஷ்டம் இல்லே!" என்று ஆவேசம் வந்தவளைப்போலப் பேசினுள் அவள். அவளைச் சமாதானப்படுத்துவது நடராஜனுக்குப் பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது.

"நீ என்ன வேணும்னலும் சொல்லு. நான் ஒப்புக்க மாட்டேன். மரியாதையா ஊரிலேருந்து கொண்டாந்த உங்கப்பாரு பணத்தை இப்படிக் கொடுத்துடு. அவனுக்காக நீ கடனை அடைக்கப்படாது. அவன் பொண்ணையும் நீ கட்டப்படாது. உனக்கு சந்திரமதியாட்டமா லக்ஷணமா லக்ஷ லக்ஷமா பணத்தோடே வர பொண்ணுப் பார்த்துக் கல்யாணம் பண்ணிவைக்கிறேன் !" என்ருள் கற்பகவல்லியம்மாள்.

நடராஜன் இதைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. பணம் கொடுப்பதாக வந்து, கணக்குகளை யெல்லாம் பார்த்துப் பேசி, வட்டியில் பெரும் பகுதியைத் தள்ளி வாங்கி, கடைசியில் இன்று பணம் கொடுக்கிற சமயத்தில் இவள் எங்கிருந்து வந்தாள் என்றுதான் அவனுக்குத் தோன்றிற்று. ஆயினும் இவளை வெகுசுலபமாகச் சமாதானப்படுத்தி அடக்கிவிடலாம். என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. அதனல், "பணந்தானே! தாராளமாகத் த்ந்துடறேன்!" என்ருன் விளையாட்டாக.

"இப்பவே,எங்கிட்டே கொடுத்துடு" என்று வற்புறுத்தினுள் கற்பகவல்லி.

"என்னம்மா இது? மூளையிருந்துதான் பேசறியா? பணம் கொடுத்துட்டா பெண்ணைக் கல்யாணம் கட்டிக் கொண்டு விடுவேணு? ஏதோ நான் வாக்குக் கொடுத்துவிட்டேன். இனி அதிலிருந்து புரண்டு பேசுவது அழகில்லை. எல்லாரையும் நாளை இந்நேரத்துக் கெல்லாம் வரச் சொல்லியிருக்கிறேம். இப்போ வந்து

நீ பணத்தைக் கேட்பதும் நான் கொடுப்பதுந்தான் கௌரவமா? அழகா? நாலுபேர் நம் குடும்பத்தைப்பற்றி என்ன நினைப்பார்கள்? எனக்குத்தான் இதனால் என்ன பெருமை உண்டாகும்?" என்று சொல்லிவிட்டு விடுவிடு என்று வாசல்புறம் எழுந்து போனான் அவன்.

அவளிடம் வீண் வார்த்தையாடுவது நேர் விபரீதமாகிவிடும் என்றே அவன் எழுந்து சென்றான். அவன் வாசலுக்கு வருவதும் வண்டியைவிட்டு யாரோ இறங்கி உள்ளே வருவதும் சரியாக இருந்தன.

நடு ஹால் ஓரமாகக் குந்தளா நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். புஷ்பாவும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வந்தவன் ஷண்முகந்தான் என்று நடராஜன் தெரிந்து கொண்டு விட்டான். சுருள் சுருளான கிராப்புத்தலை. சிவந்த மேனி. கூரிய மூக்கு. நிதானத்துடன் புரளும் விழிகள். கூடவே புஷ்பாவின் சகோதரன் சுப்பையாவும் வந்தான். சுப்பையா நடராஜனைப் பார்த்தானே இல்லையோ, "ஹைய்! பட்டணத்து அத்தான்!" என்று பாய்ந்து கொண்டு ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டான். ஷண்முகமும் சுப்பையாவும் வந்த அமர்க்களமும் பரபரப்பும் பரஸ்பரக் குசலப் பிரச்னங்களும் நடந்து முடிய முக்கால் மணிபோல ஆகிவிட்டது. இன்னும் மணிக்கணக்காகக் கூடப் பேச வேண்டியிருந்தது. ஆனால் கற்பக வல்லியின் சுமுகமற்ற பிரஸன்னத்தினால் எல்லாம் இயற்கையான அளவு கூடக்களை கட்டவில்லை. என்னவோ, எங்கேயோ ஒரு குறை நறு நறுப்பு இருப்பது போல எல்லாருக்கும் பட்டது.

* * *

வீட்டில் ஷண்முகத்தைக் காணவில்லை. யாரையோ பார்த்து விட்டு வருவதாகச் சொல்லிப் போயிருந்தான். நடராஜ சுந்தரத்துக்கு இருப்பே கொள்ள வில்லை. அவன் மனசில் குந்தளா, புஷ்பா இவர்களில் யாருக்கு இடமளிப்பது என்பது தெரியவில்லை. பார்க்கப் போனால் இரண்டும் அவ்வளவு சுலபம் அல்ல என்றும் தோன்றியது. புஷ்பாவை மணந்து கொள்வதற்கு முதல் இடையூறு அவன் தாய். இரண்டாவது இடையூறு குந்தளாவேதான். குந்தளாவைப் பார்க்காமல் இருந்திருந்தால் அவன் மனசில் கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே எழுந்திருக்குமோ என்னவோ, தெரியாது. ஆனால் அவளைப் பார்த்தது முதல் அவன் மனசு அடைந்த நெகிழ்ச்சியை அவனால் கட்டுப் படுத்த முடியவில்லை- கண்ணைப் பறிக்கும் அவள் அழகு அவன்

நெஞ்சையே பறித்துக் கொண்டு போய்விட்டது. புஷ்பாவைத் தனியே பார்க்ககையில்தான் அவளுடைய சிறப்பு அவனுக்குத் தெரிந்தது. தன்னலமற்ற அன்பு அவள் முகத்தில் சதா மலர்ந் திருக்கும். அங்கே அழகின் படாடோபமோ பிரமிப்போ இல்லை. ஆனால் நிலவின் தண்மை இருந்தது. தென்றலின் இனிமை இருந் தது. 'அத்தான்' என்று வாய் நிறைந்து அழைக்கும் குரலிலே கரும்பின் சுவை இருந்தது. மன ஓட்டத்தைப் புரிந்து கொள்வதி லும் நிலைமையைச் சாதுரியமாக மாற்றுவதிலும் நேர்மையிலும் செப்பிடுவித்தையின் மாயம் இருந்தது. ஆனால் குந்தளா,—

வெறும் அழகைத் தவிர அதாவது புறத்தைத் தவிர அவளைப் பற்றி அவனால் ஒன்றுமே அறிந்து கொள்ள முடியவில்லை. அப் படி ஒன்றும் தெரியாததனாலேயே ஒரு கவர்ச்சி அவனை இழுத்தது. இருந்தாலும் மற்றதெல்லாம் எப்படிச் சாத்தியம்? அவள் தந்தை சென்னையில் இருக்கிறார். புஷ்பாவுக்கு அவன் தான் என்று இங்கே மாமாவும் புஷ்பாவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க அவளுடைய சிநேகிதியையே அவன் போய்ப் பார்த்துப் பேசி, கல்யாணம் செய்துகொள்வது என்பது சாத்தியமானதாகத் தோன்றவில்லை. இரண்டாவது அவன் தாயே இதற்கும் சம்மதிக்கமாட்டாள்.

நடராஜன் யோசித்து யோசித்து அலுத்துப் போனான். மெல்லக் காலாற நடந்து போக எண்ணி அல்லிக் குளத்தின் கரையோடு ஆற்றின் பாலத்தை நோக்கிக் கிளம்பினான்.

அந்தி மயங்கி வந்தது. வானத்தின் கீழ்ப்புறத்தில் நிலா வட்டமாகச் சிந்திக் கொண்டிருந்தது. அன்றைக்குச் சரியாகப் பதினைந்தாம் நாள் தீபாவளி. பருவ மழையே பெய்யாத அந்தப் பிரதேசம் பசுமை வாடியே தென்பட்டது. லேசாக வீசிய பனி யின் குளிர் வாடைக்கு அல்லிக் குளத்திலிருந்து எழுந்து வந்த நீரின் வெப்பம் இதமாய் இருந்தது. நடராஜன் குளத்தின் மேல் கரையை ஒட்டிய மாந்தோப்பு வழியாக ஆற்றுப் பாலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நீரிலே தெரிந்த நிலவின் பிம்பம் அலையின் விசிறி அசைவிலே சிரிப்பது போல் இருந்தது. நடராஜன் அந்தக் காட்சியைக் கண்டு மனசைப் பறிகொடுத்துச் சிறிது நேரம் நின்றான். சுற்றிலும் இயற்கையின் அழகு நில வொளியும் சந்தியா வேளையும் கலக்கின்ற நிலையில் நெளிந்து கொண்டிருந்தது. கரையின் இறக்கத்தில் கிடந்த ஒரு கல்லின் மேல் அவன் தன்னை யறியாமல் உட்கார்ந்து கொண்டான். அலையின் சிரிப்பு மெல்லிய நகையொலி போலப் பெருகிக் கரை யின் எதிர்க்கரை வரைக்கும்போய் எதிரொலி செய்யத் தொடங் கியது. முதலில் இதை அவன் மனப் பிரமையோ என்று எண்ணி

வாளாவிருந்தான். ஆனால் திடீரென்று சிரிப்பு வெண்கலத் தொனியுடன் கலகலக்கத் தொடங்கிக் கார்வை செய்துவிட்டு அடங்கியது. அதன் எதிரொலியும் அவன் காதை வந்து நிறைத்ததும் நடராஜன் சரேலென்று எழுந்தான். கரையிலுள்ள மாந்தோப்பு மேட்டுக்கு மறைவில் இருந்ததால் கல்லின் மேல் ஏறி நின்று கொண்டான். மறுபடியும் கெக்கலிச் சிரிப்பும் கலகல வென்ற நகையும் பெரிதாக ஒலித்தன. பெண்ணின் குரல் அது. சுற்றுப் புறத்தில் வீடுகளே இல்லை. இந்தச் சாயந்தர வேளையில் தனிமையில் தான் இருக்கிறோம் என்ற நிச்சயத்துடன் பயமோ கூச்சமோ இன்றி அந்தப் பெண் சிரித்தாள். எதிர்க் கோடியிலிருந்து தோப்பின் இந்தக் கோடிக்கு அவள் வந்து கொண்டிருந்தாள். நடராஜன் ஊன்றிக் கவனித்தான். அவள் மட்டும் தனியாக வரவில்லை. கூட ஒரு வெள்ளை உடை தெரிந்தது. மரத்தின் மறைவில் முதலில் அவன் வருவது சரியாகத் தெரியவில்லை. தோப்பின் எல்லையை அடைந்ததும் அவள் சந்திரனைப் பார்த்தபடி மரத்தில் சாய்ந்து கொண்டு நின்றாள். நடராஜன் தன்னைக் கவனித்து விடப் போகிறாளே என்று தலையை மட்டும் குனிந்து கொண்டான். பேச்சுக் குரல் கணீரென்று கேட்டது. ஆனால் பேசும் விஷயம் புரியவில்லை. குரல் குந்தளாவுடையது போலிருந்ததால் நடராஜன் ஆச்சரியமடைந்து நன்றாக நிமிர்ந்து பார்த்தான். சந்தேகமேயில்லை. அவள் மரத்தின் அடிப்பாகத்தோடு சாய்ந்து கொண்டு ஒய்யாரமாக நின்றாள். பக்கத்தில் ஷண்முகந்தான்!

நடராஜனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. யாரையோ பார்க்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனானே, இவளைப் பார்க்கத்தானா? மறுபடியும் கரையின் மேலே சிரிப்பும் பேச்சுமாகக் கொம்மளப்பட்டது. நடராஜனுக்கு இருதயத்திலே யாரோ ஈட்டி கொண்டு தாக்குவது போல் இருந்தது. வானத்திலே தெரிந்த வட்ட நிலவும், அலையின் நெளிவிலே உருளும் நிலவின் பிம்பமும் எதிர்க்கரையும் எல்லாமும் அவனையே பார்த்துக் குலுங்கக் குலுங்க நகைப்பதுபோல இருந்தது. புஷ்பம் போன்ற புஷ்பா காத்திருக்க இன்னொருவனிடம் அன்பு கொண்டுள்ள ஒருத்தியிடம் மனசை நெகிழ விட்டதற்காகச் சிரிப்பது போல் இருந்தது.

அவர்கள் மாலை வேளையில் உலாவுவதிலே தவறு என்று ஒன்றும் இல்லைதான். ஆனால் அன்று புஷ்பா சொன்ன விஷயத்துடன் இதைச் சேர்த்துப் பார்த்தபோது அப்பொழுதுதான் உண்மை தெரிந்தது. களங்கம் எதுவும் இல்லாத பரிசுத்தக் காதலர்களாக அவர்கள் இன்று அவன் கண்ணெதிரே இலங்கினார்கள். தன்னுடைய நடவடிக்கையில் இன்னும் சிறிது அதிகமாகப் போகா

மல் இருந்தோமே என்பதற்காக இப்போது அவன் தன்னைத் தானே மெச்சிக் கொண்டான்.

பாலத்தடி வரையில் போவதாக எண்ணி வந்தவன் அவர்களைக் கவனித்ததையே காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காகத் திரும்பி வந்த வழியே நடக்கத் தொடங்கினான்.

பாதி தூரம் வந்ததுமே வேதையஞ் செட்டியார் 'ஹஹ்ஹெ' என்று சிரித்துக் கொண்டே, "வாங்க தம்பி! ஊரிலிருந்து நம்ப அம்மா வந்திருக்காங்களாமே!" என்றார்.

நடராஜனுக்கு எரிச்சல்தான் வந்தது. "நம்ப அம்மா இல்லே. எங்க அம்மாதான் வந்திருக்காங்க!" என்றான்.

"நியாயந்தானே! நீங்களோ சிறு பிள்ளை. தாயா பிள்ளையா இருந்தாலும் வாயும் வயிறும் வேறேதானேம்பாங்க. இந்தக் காலத்துலே வந்து இருபதினாயிரம் ரூபாயும் முப்பதினாயிரம் ரூபாயும் கொண்டு வந்து, என்னதான் மாமன்காரரா இருக்கட்டும், கொடுக்கறதாவது, கொள்றதாவது? இதோ பாருங்க, இப்பவும் ஒண்ணும் மோசம் போயிடலே, அம்மா மனசு கோணாமே நடந்துக்குங்க. 'நான் கொடுக்கத் தயார் தான். அம்மா கூடா துங்கறாங்க'ன்னு அம்மா பேரிலே போட்டுட்டீங்கன்னா பழியை, போவுது! ஹி ..ஹி...ஹி...ஏன், நான் சொல்றதுலே ஏதாவது...? இப்ப வேறே ஒண்ணும் இல்லே! ஐயாவுக்கு வேறே புள்ளே குட்டி இல்லாட்டியும் போனா போவுதுங்கலாம். சொத்தெல்லாம் உங்களுக்கே வரும். அதுவும் இல்லே! ஒரு புள்ளே வேறே வாரிசு இருக்கு. ஆக, நல்ல இடத்தையெல்லாம் விட்டுட்டுப் பணத்தையும் கொடுத்து, தேளையும் கொட்டிக்கிற சங்கதி எதுக்கு? இப்போ அடுத்தாப்பலே இன்னொரு மருமவன் இருக்கிறான். அவன் இப்படியா? இதோ மாந்தோப்புக் கரையிலே எங்க அண்ணன் பேத்தியும் அவனும் பேசிக்கிட்டுப் போறதைப் பார்த்துட்டுப் பாக்காதது போலத்தான் நான் வரேன். அவரு அந்த மாமன் பெண்ணைக் கட்டிக்கிறதுதானே! எங்க அண்ணன் இவ்வளவு அன்னிக்கு வாய் கிழியப் பேசினாரே, அவுரு பேத்தி நல்ல பணக்கார இடமா பார்த்துக்கிட்டும்னு இருக்காரு! இப்ப இந்தப் பொண்ணே உங்க தலையிலே கட்டினாத்தானே தம் பேத்தியை அங்கே ஷண்முகத்துக்கே கொடுக்கலாம். அதுக்கேத்தாப்பலே அவுங்களும் ஒருத்தரை ஒருத்தர் சுத்திக்கிட்டு வெக்கமில்லாமே திரியறாங்க! ஏன்?... அப்படியிருக்கு சங்கதி!" என்று பேய்ச் சிரிப்பு ஒன்று சிரித்துவிட்டு நிறுத்தினார் வேதையஞ் செட்டியார்.

அவர் கடைசியாகச் சொன்ன விஷயம், அதாவது குந்தளா-ஷண்முகம் இவர்களுடைய அந்நியோந்நியத்தை ஊர்ஜிதம் செய்த

விஷயம் மட்டுமே நடராஜன் செவியில் ஏறி, மனசையும் குடைந்தது. அவன் மிகுந்த வேதனையுடன் வீட்டை நோக்கிச் சென்றான்.

வாசலில் புஷ்பா நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் நிலவு ஒளி வீசிய வண்ணம் இருந்தது. நிலவு பூத்த புஷ்பாவின் முகம் இப்போது அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பது போன்று அவனுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று.

* * *

இரவு கழிந்தது.

கற்பகவல்லி மழைக்கு முன் வரும் புழுக்கத்தைப்போல் எப்பொழுது எரிமலை வெடிக்குமோ என்று எண்ணும்படி யந்திரம் போல இருந்துவந்தாள்.

சுவாமிநாதபிள்ளை மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். வண்டிக்காரத் தம்புச்சாமி ஒவ்வொருவராகப் போய்க் கூட்டிக்கொண்டு வந்தான். முதலில் காதர்பாக்ஷா ராவுத்தர் வந்தார். பிறகு சின்னவூர் முதலியார் வந்தார். இப்படி ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள்.

அதுவரையில் நடராஜனோ ஷண்முகமோ ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. வந்தவர்கள் எல்லோரும் வாசலில் உட்கார்ந்து அரட்டையும் அட்டகாசமுமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"வேதையஞ் செட்டியாரையும் கடைசியா ஒரு தடவை கூப்பிட்டு அனுப்பிச்சுடுங்க. அப்புறம் கூப்பிடல்லேங்கற பேச்சு வரவேண்டாம்" என்று மணியகாரர் குமாரசாமிபிள்ளையைப் பார்த்துச் சொன்னார் சுவாமிநாத பிள்ளை.

குமாரசாமிபிள்ளைக்கு இதைச் செய்ய இஷ்டம் இல்லை. ஆனாலும் அவர் வார்த்தையைத் தட்டாமல், "போடா தம்புச்சாமி; போய் அவனையும் வரச் சொல்றாங்கன்னு கூப்பிட்டுக்கிட்டு வா. வந்தாப் பாரு. இல்லாட்டிப்பேசாமே வந்துடு" என்று சொல்லி அனுப்பினார்.

திடீரென்று உள்ளேயிருந்து, "தம்பி நடராஜா! நடராஜா!" என்று குரல் வந்தது.

நடராஜன் எழுந்து உள்ளே சென்றான். கற்பகவல்லியம்மாளின் கண்களில் தீப்பொறி பறந்தது.

"ஏன் தம்பி! பெத்த தாய் வேண்டாம், மாமன்தான் பெரிசுன்னு சொல்றியா நீ?" என்று குமுறிக்கொண்டு வரும் ஆத்திரத்துடன் கூவினாள்.

"ஏன், என்ன விஷயம்?" என்று மெல்லப் பேசும்படி சைகை காட்டிக்கொண்டே கேட்டான் நடராஜன்.

"இல்லே, பெத்த தாய் வேண்டாம்னுதானே சொல்றே நீ?"

"அதுதான் ஏன் இப்படிக் கேட்கிறாய் என்கிறேன்?"

"நான் வேணும்னு அங்கேயிருந்து கொண்டாந்த தொகையை இப்படிக் கொடுத்திடு. எவனோ திமிரு எடுத்துக் கடன்பட்டானாம்; அதுக்கு இவன் உடன்படறானாம்! நல்ல கதைடீ இது" என்று பொருமினாள் கற்பகவல்லியம்மாள்.

"ஏன் அம்மா இப்படி வாசல்லே நாலுபேர் உட்கார்ந்திருக் கறப்போ கூப்பாடு போடறே? உனக்குப் பணந்தானே வேணும்? ஊருக்கு வா கொடுக்கறேன். இப்ப நான் சொன்ன வார்த்தை யைப் புரட்டமாட்டேன். இங்கே ஒரு தம்பிடி கொடுக்க முடி யாது" என்றான் நடராஜன்.

"ஏண்டா தம்பி! என்ன சொன்னே? முடியாதா? ஏண்டா முடியாது? தாலியைக் கட்டினவன் எனக்குன்னு வச்சிருந்த பணத்தை நீ எப்படிடா கொடுக்க மாட்டேன்னு சொல்லுவியாம்! கூப்பிடுடா அந்த நாலு பேரை! அவுங்ககிட்டேயே இந்த நாயத் தைக் கேப்போம். எந்தச் சண்டாளப் பயடா உனக்கு இப்படி யெல்லாம் பேச போதனை செய்து வச்சான்? எனக்கு உன்னை ஆகவிடாமே செய்யற பாவி உருப்படுவானா?" என்று குய்யோ முறையோ என்று இரைந்து கத்தத் தொடங்கினாள் கற்பகவல்லி யம்மாள்.

சுப்பையா, புஷ்பா, அவள் தாய், குந்தளா எல்லோரும் வாயை மூடிக்கொண்டு செய்வது தோன்றாமல் மலைத்துப்போய் நின்றார்கள். உள்ளே சந்தடி அதிகமாவதைக் கேட்டுச் சுவாமி நாதபிள்ளையும் ஷண்முகமும் திகைத்துப்போய் உட்கார்ந்திருந் தார்கள்.

ஆனால் இதற்குள் கற்பகவல்லியம்மாளே ஒருவரும் எதிர் பார்க்காத விதத்தில் வாசலுக்கு வந்துவிட்டாள். "நீங்கள்ளாம் சொல்லுங்க நாயத்தை! அவன் சிறு பிள்ளை. அவனைக் கமுக் கமா இங்கே பணத்தைக் கொண்டாரச்சொல்லி, உங்க கணக்கை யெல்லாம் தீர்க்கறதுக்காக அவனை அலேச்சு, குதிராட்டமா இருக் கிற என்னை ஒரு வார்த்தை கேக்காமெ இப்படியெல்லாம் செய் யறதுதானா நாயம்? நாளைக்கு அவனுக்கு வர்ற நல்ல இடத்தை யெல்லாம் கெடுத்து அவனுக்குத் தம் பெண்ணையும் கட்டி வச்சு கடனுக்கு நாமம் பட்டையாகப் போடத்தானே இந்த வழி? இதோ

பாருடா நடராஜா, நீ எக்கேடு கெட்டு வேணுலும் தொலே. என் பணத்தைக் கீழே வச்சிட்டு மறுவேலே பாருங்க. நானும் நேத்துலேயிருந்து என்னதான் சொல்ருங்க, என்னதான் செய்யருங்கன்னு பாத்துக்கிட்டுத்தான் இருக்கிறேன் என் பணத்தை எண்ணிக் கீளே வச்சிட்டு உப்புப் போட்டுச் சாப்பிடறவங்களா இருந்தா சோறு தின்னுங்க. கடனே அடைக்கணும்ணு நிலத்தை வித்து அடைக்க! நீச்சை வித்து அடைக்க! இதுக்கு ஏமாந்தவனு இவன்தானு அகப்பட்டான்? வயத்தைக் கட்டி வாயைக் கட்டி நல்ல சோறுகூட திங்காமெ செத்துப்போன மனுஷன் சேர்த்து வைச்சுட்டுப் போறதாவது! அதைக் கண்டவங்க வந்து கையாடித் திங்கிறதாவது?" என்று ஆவேசம் வந்தவளைப்போலப் பேசினுள்.

இதற்குள் தம் வேலே எவ்வளவு தூரம் பலிக்கிறது என்று வேடிக்கை பார்க்கவே வேதையஞ் செட்டியார் பணத்தைப் பெற்றுக் கொள்ள வருபவர்போல தஸ்தாவேஜி சகிதம் வந்து சேர்ந்தார். பணம் இன்று பைசலாகாது என்று அவருக்குத் தெரியாதா, என்ன?

சுவாமிநாதபிள்ளையும் நடராஜனும் குன்றிப்போய் நின்றனர்.

"எனக்கு இருக்கிறது ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணுன்னு ஒரு பிள்ளே. அதையும் மோசக் கருத்தோடெ எனக்கு ஆகவிட்டாமெ அடிச்சா உனக்கு இருக்கிற ரெண்டும் உனக்கு ஆகாமே போயிடும். சொல்லிட்டேன்" என்ருள் கற்பகவல்லியம்மாள் மீண்டும்.

"அம்மா! கொஞ்சம் நிதானமாகப் பேசு!" என்று உறுமினுன் நடராஜன்.

"நானு நிதானமில்லாமே நடக்கறேன்? பேசறேன்? நிதானத்தோடே நடக்கிறவனு நீ? உன் வீட்டுப் பணத்தைக் கொண்டு வந்து அதான் கொடுக்கிறேன்னு வந்திருக்கியாக்கும்? கிளம்பும்போதே முட்டிக்கிட்டேனே, கேட்டியா? நான் நிதானமாப் பேசலேன்னுல்லே சொல்றே. என் பணத்தைக் கீளே வைக்கச் சொல்லு. நான் நிதானமா இருக்கேன்" என்ருள் மறுபடியும்.

"அப்போ உங்களேக்கலந்துக்காமலா இவ்வளவும் நடக்குது?" என்று தூபம் போடுவதுபோலத் தொடங்கினுர் வேதையஞ்செட்டியார்.

சுவாமிநாதபிள்ளேக்கு உடலே நடுங்கியது. அவர் பேச்சின் போக்கை இனியும் சகிக்கமுடியாது என்று வளருவதைப் பார்த்துவிட்டு விடுவிடென்று கற்பகவல்லியம்மாளுக்கு எதிரே

வந்தார். பளார் பளார் என்று தம் கன்னத்தில் போட்டுக் கொண்டார். "அம்மா, தப்பு, தப்பு, தப்பு! ஆயிரம் வாட்டி சொல்றேன் தப்பு! உன் பணம் எனக்கு வேண்டாம். உனக்கு உன் பிள்ளை செய்யறதுலே சம்மதமில்லேன்னு நீ வந்ததுமே சொல்லியிருக்கலாம். இப்படி நாலு பேர் முன்னிலேயிலே என்னை அவமானப்படுத்த வேண்டியதில்லே! நாளைக்கே இந்தப் பணத்துக்கு உண்டான நிலத்தை உன் பேருக்கு சாஸனம் செய்து வைச்சுடறேன். சம்மதந்தானு? அநாவசியமா பேசக்கூடாத வார்த்தையெல்லாம் பேசாதே!" என்றார்.

வேதையஞ்செட்டியாரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சுவாமிநாதபிள்ளையின் பெரும் குணத்தை நன்கு அறிந்தவர்கள் ஆதலால் இந்தக் காட்சியைக் கண்டு திக்பிரமையடைந்து பச்சாத்தாபத்துடன் உட்கார்ந்திருந்தனர். நடராஜனும் ஷண்முகமும் மாமாவின் பேச்சைக் கேட்டு உணர்ச்சியின் எல்லேயில் நின்றார்கள்.

"உன் நிலம் இங்கே யாருக்கு வேணும்? நாங்க இருக்கறது பட்டணத்துலே. இந்தக் கிராமத்துலே எங்களுக்கு என்னத்துக்கு நிலமும் நீச்சும்? நீயே வச்சுக்க அதை. கடங்காரங்களுக்கு வேணு பிரிச்சுக் கொடுத்துக்கோ!" என்றுள் கற்பகவல்லியம்மாள்.

"அது நியாயமான பேச்சு!" என்றார் வேதையஞ்செட்டியார். "கடனுக்குப் பணமாக் கொடுப்பானேன்; அப்புறம் அதுக்காக நிலத்தை விப்பானேன்? அதனுலேதான் நிலமாவே கொடுத்துடுங்கன்னு நானே சொன்னேன்.. ஐயா கேக்கலே!" என்றார் மீண்டும்.

"அட சும்மா இருப்பா, சமயம் தெரியாமெ பேசிக்கிட்டு? இப்ப என்ன ஐயா அவசரம்! கடனை நாம்ப திருப்பிக் கேட்டமா? ஐயா கொடுக்கறபோது கொடுக்கட்டுமே!" என்றார் ராவுத்தர்.

"ஆமாம்; எங்களுக்கு இப்ப பணமே வேண்டாம். மெதுவா கொடுக்கிறபோது கொடுத்தால் போதும்" என்றார்கள் மற்றவர்கள்.

"எனக்குப் பணம் அல்லது நிலம் இப்பவே வேண்டும்" என்றார் செட்டியார்.

"வேண்டாம்; எல்லோருக்கும் இன்னித் தேதியிலே நிலமாவே கொடுத்திடறேன். தம்பி நடராஜா! பணத்தைக் கொடுத்திடு உங்க அம்மாகிட்டே! யார் யாருக்கு எந்தப் பங்கு அடை

மானமோ அதையே இன்னிக்குப் பிரிச்சு எழுதி ரிஜிஸ்டர்பண்ணி விடுவோம்'' என்றார் சுவாமிநாதபிள்ளை.

நடராஜன் முரட்டுப் பிடியாக, "பணத்தை நான் கொடுக்க முடியாது. அது என் பணம். எங்க அப்பன் சம்பாதிச்ச பணம்! நடக்கிறது நடக்கட்டும்'' என்றான்.

எல்லாருமே சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார்கள். "என் பணம் போக மீதி எவ்வளவு தொகை ஆகிறது குமாரசாமி பிள்ளை!'' என்று மௌனத்தைக் கலைத்தவாறு கேட்டான் ஷண் முகம். "பதினாறாயிரத்து நானூறு'' என்றார் குமாரசாமிபிள்ளை.

"நடராஜ்! பணத்தைக் கொடுத்துவிடு அம்மாகிட்டே! இல்லா விட்டால் இதோ நான் தருகிறேன். அந்தத் தொகைக்குச் செக்! நான் தருகிறேன், ஏன் வம்பு? இந்தப் பணத்தை இப்போது இவர்கள் கணக்குப்படி கொடு. சாயங்காலத்துக்குள்ளே இந்தச் செக்கை மாத்தி அத்தைக்குக் கொடுத்துவிடலாம்'' என்றான் ஷண்முகம்.

மேலே என்ன நடக்கப் போகிறதோ என்று திகைத்த எல்லா ருமே ஆச்சரியத்துடன் பணத்தைக் கொடுக்க முன் வந்த ஷண் முகத்தைப் பார்த்தாகள். சுவாமிநாதபிள்ளைக்குப் போன உயிர் வந்தது போல் இருந்தது.

நடராஜன் மணிபர்ஸைத்தூக்கி அம்மாவிடம் விட்டெறிந்தான். "இந்தா, தொலை! நீ கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டேன், உனக்கே! ஷண்முகம்! எல்லாருக்கும் செக்காகவே தனித்தனியா கக் கொடுத்துவிடு. அல்லது சாயங்காலம் பணமாக வேணுமானா லும் மாற்றிக் கொடுத்துவிடலாம்!'' என்றான் உத்வேகத்துடன்.

"அப்புறம் உனக்கு மட்டும் இங்கே என்ன வேலை?'' என் றாள் கற்பகவல்லி சிறிது குன்றிப் போய்.

"அதைப்பற்றி உனக்கு என்ன? உனக்கு வேண்டியது உன் பணம். அதைக் கொடுத்துட்டேன். ஆனல் நான் எதற்காக இங்கு வரவில்லையோ அதையாவது பரிகாரமாகச் செய்துவிட்டுத்தான் வருவேன். நீ போகலாம்!'' என்றான்.

"என்ன பரிகாரம்!''

"உனக்குச் சொல்ல வேண்டியது அவசியமில்லை. இருந்தா லும் பெத்த தோஷத்துக்காகச் சொல்கிறேன். புஷ்பாவை நான் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். உனக்குப் பிள்ளை வேண்டும் என்று இருந்தால் மறுபேச்சுப் பேசாமல் வாயை மூடிக் கொண்டு போகவேண்டும்!'' என்றான்.

எல்லாருக்கும் ஒரு கலகலப்பை உண்டாக்கி விட்டது நடராஜ னின் பேச்சு.

"நீதான் முறைப் பையனு? அவளுக்கு ஷண்முகமும் முறை தானே? அவன் கட்டிக் கொள்ளக் கூடாதா?" என்ருள் கற்பக வல்லியம்மாள்.

"அவனுக்கும் வேறு பெண் பார்த்துத் தீர்ந்தாகி விட்டது. குமரசாமி பிள்ளையின் பேத்தி குந்தளம் இருக்கிருள்!" என் ருன், நடராஜன் வெகு நிதானமாக.

"சரி; எக்கேடு கெட்டுப் போ!" என்று பர்ஸை எடுத்துக் கொண்டு போனுள் கற்பக வல்லியம்மாள்.

ஷண்முகம் முதல் செக்கை வேதையஞ் செட்டியார் பேருக்கு எழுதிக் கொடுத்தான். செக்கைக் கொடுக்கும்போது, "வேதை யாபிள்ளை அவர்களே! பட்டணத்துலெருந்து வர்றப்போ நீங்க வந்த வண்டியிலேதான் நானும் வந்தேன். ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சுக்க வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே கொடுத்தான் ஷண்முகம்.

எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் போனுர்கள்.

* * *

மறுநாளும் சாயங்கால வேளையில் மாந்தோப்புக்கருகில் நிலா சிரித்துக் கொண்டுதான் இருந்தது.

"கொண்டு வந்த பணத்தைக் கொடுக்கக் கூடாது என்று அம்மா தடுத்துவிட்டாள். அதைப் போல, கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன் என்பதை யாராவது தடுக்க வந்தால் அதையுந்தானே கேட்டு நடப்பீர்கள்?" என்ருள் புஷ்பா.

"போக்கிரி நீ!" என்று சொல்லிவிட்டு அவள் கன்னத்தைக் கிள்ளினுன் நடராஜ சுந்தரம்.

மாந்தோப்பின் மறு மூலையில் முதல் நாளைப் போல்வே சிரிப் புச் சத்தம் கேட்டது. புஷ்பா விஷயம் புரியாமல் விழித்தாள்.

"பயப்படாதே; வேறு யாரும் இல்லை. குந்தளாவும் ஷண்முக முந்தான்!" என்ருன் நடராஜன்.

மரத்தடியில் நின்ற புஷ்பா வெட்கத்துடன் சிரித்தாள். வானில் ஏறி வரும் நிலா அன்பை அள்ளிப் பூசிக் கொண்டே சிரித்தது.

முற்றும்

# தமிழா! உன் அதிருஷ்டம்!

தமிழ் மொழியின் தனிச் செல்வம் சங்க காலத்து நூல்கள். சங்ககாலச் செய்யுட்களில் இயற்கை எழில் இலங்கும். காதல் சுடர் விடும். வீரம் விளங்கும். அந்தச் செய்யுள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அழகிய காட்சி. அவற்றில் மிகச் சுவையுள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து விளக்கம் எழுதிச் சில புத்தகங்களாக வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சங்க நூல் காட்சிகள் என்ற இந்தவரிசையை ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் எழுதுகிறார். 'வழி காட்டி' 'காவியமும் ஓவியமும்' என்ற புத்தகங்களில் உள்ள முறையில் விளக்கம் இருக்கும். நல்ல காகிதத்தில் மூவர்ண அட்டையுடன் புத்தகங்கள் விளங்கும். ஒவ்வொரு புத்தகத்திலும் 7, 8 காட்சிகள் இருக்கும்.

ஒவ்வொன்றின் விலை ரூபாய் மூன்று. முதல் வெளியீடு 1—12—51-ல் வெளிவரும். மற்றவை பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் தேதியிலும், கடைசிப் புத்தகம் 1—7—52-லும் வெளி வரும்.

சந்தாதார்கள்: ரூ. 5—0—0 முன் பணம் செலுத்திச் சந்தாதாரர்களாகப் பதிவுசெய்து கொள்பவர்களுக்குச் சில சலுகைகள் உண்டு. முதல் ஆறு புத்தகங்களும் வெளியாக ஆக அவை ஒவ்வொன்றும் ரூ. 2—10—0 க்கு வி.பி. மூலம் அனுப்பிவரப்படும். 7, 8-வது புத்தகங்கள் முன்பணமான ரூ. 5-க்கு ஈடாக அனுப்பப்படும்.

**அமுத நிலையம் லிமிடெட்**

தேனாம்பேட்டை சென்னை 18

MAHARAJAH SERFOGI'S SARASWATI ... TANJORE